Registered as a Newspaper in Ceylon ★★ விலைசதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (18-7-66) இதழ் 158

பராபவ ஆடி 2 ரபி அவ் 28 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன் 519
நகை மாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

## மாவுக்குப் பதில் லின்பியோ?

பீகிங், ஜுலை 17

சீனாவில் மாஸேதுங்கின் ஸ்தானத்திற்கு திரு. லின்பியோ நகர்ந்துகொண்டிருக்கிறார். லின்பியோவின் கருத்துக்கள், மாஸேதுங்கின் கருத்துக்களுக்கு மேல் இப்போது ஏற்றப்பட்டுவருகின்றன

லின்பியோவை அனுசரித்து நடப்பவர்கள் மாவுக்கு உண்மையான சீடர்கள் என பாராட்டப்படுகிறார்கள்.

# சதி வழக்குக்கு நிதி சேகரிக்க யோசனை

## சுதந்திரக் கட்சி நிர்வாக சபை விரைவில் விவாதிக்கும்

கொழும்பு, ஞாயிறு

தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டுள்ள வழக்கில் எதிரிகளாக இருப்போர் பலர் தமக்காக வாதாடுவதற்கு போதிய பொருளாதாரம் இல்லாதிருப்பதால் அவர்களுக்காக வாதாடுவதற்கு தகுந்த வழக்கறிஞர்களை நியமிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிதிசேர்த்து உதவியளிக்கவேண்டுமென்று கட்சியின் தலைமைப்பீடத்துக்கு கட்சிக் கிளைகள் சில யோசனைகூறியுள்ளதாக அறியப்படுகிறது.

பொதுமக்களிடமிருந்து நிதி சேர்த்து உதவிபுரிய வேண்டுமென்ற இந்த யோசனை பற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகசபை சமீபத்தில்கூடும் பொழுது விவாதிக்குமெனத் தெரியவருகிறது

## கத்திகள் துப்பாக்கிகள் சகிதம் 5 பேர் கைது

### கொழும்பில்காணாமல்போனகார் புல்மோட்டையில் பிடிபட்டது

கொழும்பு, ஞாயிறு

கொழும்பில் காணாமல் போன ஹோஸ்டின் கேம்பிரிட்ஜ் கார் ஒன்று கிழக்கு மாகாணத்தில் குச்சிவெளி புல்மோட்டை என்ற இடத்தில் பொலிஸார் கைப்பற்றிய போது அதனுள் கிறிஸ்கத்திகள், வாள்கள், இரண்டு துப்பாக்கிகள் ஆகியவை இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. காரில் ஐந்து நபர்கள் இருந்ததாகவும் அவர்கள் ஐவரும் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என்றும் கருதப்படுகிறது.

கடந்த 12-ம் திகதி பெரியான்பத்திரிக்கு முன்பாக காலை 11 மணியளவில் காரின் சொந்தக்காரர் அதை நிறுத்திவிட்டு ஏதோ அலுவலாக சென்றிருந்த சமயம் களவாடப்பட்டது. பொலிஸாருக்கு தகவல் தெரிந்தவுடன் அவர்கள் ரேடியோ மூலம் நாட்டின் பலபாகங்களிலுமுள்ள எல்லாப் பொலிஸ் நிலையங்களுக்கும்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜி. ஸி. ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகள்

### அதிபர்கள் அதிருப்தி; பரீட்சை கமிஷனர் விளக்கம்

கொழும்பு, ஞாயிறு

ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் சமீபத்தில் வெளியானதில் சரியான நியாயம் வழங்கப்படவில்லையென்று கொழும்புப்பகுதியிலுள்ள கல்லூரி அதிபர்களும் வெளிமாகாண கல்லூரி அதிபர்களும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். ஆனால் பரீட்சைக் கமிஷனர் இதுபற்றித் தெரிவிக்கையில் "பாடபோதனைகள் மோசமாக நடைபெற்றிருக்கின்றன" என்று கூறியுள்ளார் ஜி.ஸி. ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்திபெறுபவர்களே சர்வகலாசாலையில் சேர்ந்து கல்விபெறமுடியும். சர்வகலாசாலையில் நிலவும் இடநெருக்கடி காரணமாக பரீட்சை எழுதிய மாணவ மாணவியர் பழிவாங்கப்பட்டிருக்கின்றனர் என்பதே பொதுவான கருத்து.

போதனா பயிற்சியில் திறமை காட்டித் தெரிவு செய்யப்பட்ட 90 விஞ்ஞான மாணவர்கள் சாதனா பயிற்சியிலும் திறமை காட்டியதின் காரணமாக ஜி. ஸி. ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட்டதாகவும் ஆனால் இவர்களில் பத்துப்பேர்தான் சித்தியடைந்துள்ளனரென்றும் றோயல் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்,

ஆனந்தா கல்லூரி அதிபர் இதுபற்றிக் கூறுகையில் பரீட்சை மிகவும் கடினமாக இருந்திருக்கிறதென்றும் திறமையான மாணவர்களும் கூட சித்தியடையவில்லை என்றும் கூறினர். விசாக வித்தியாலய அதிபர் திருமதி புளிமூடும் இந்தப் பரீட்சை முடிவுகள் பற்றி அதிருப்தி தெரிவித்தார்.

ஆனால் இப்பரீட்சை முடிவுகள் பற்றி பரீட்சைக் கமிஷனர் அபிப்பிராயம் தெரிவிக்கையில், இதற்கு பாடபோதனை சரியான முறையில் அளிக்கப்படாததே காரணமாக இருக்க வேண்டும் என்று கூறினர்.

## பொலிஸ் அதிகாரி திடீர் இடமாற்றம்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறைபொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு. எஸ். இராசநாயகம் திடீரெனபாணந்துறைபொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு பாணந்துறை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. கே. செல்லையா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## 29-ல் ம. பொ. சி. இலங்கை வருவார்

குரும்பசிட்டி, ஞாயிறு

பதுளையில் அண்மையில் நிகழவிருக்கும் மலைநாட்டு மக்களின் கலைவிழா வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளும்பொருட்டு தென்னிந்திய தமிழரசுக்கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானக்கிராமணியார் இம்மாதம் 29-ந் திகதி இலங்கை வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ம பொ. சி, யின் 60-வது வயது பூர்த்தியானதையொட்டி, அவருக்கு கொழும்பில் பல மன்றங்கள் மணிவிழாவை நடத்தவும் ஏற்பாடுகள் செய்துவருகின்றன. இந்தமணிவிழாவில் தமிழ் அரசியல்கட்சித் தலைவர்கள் பங்குபற்றி உரையாற்றுவர்.

இலங்கையில் தங்கிநிற்கும் நாட்களில் திரு. ம. பொ.சி. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கம்பளை, ஹட்டன் ஆகிய இடங்களுக்கும் விஜயஞ்செய்வாரெனத் தெரிகிறது.

## பொதுமக்கள், எம். பி.க்கள் கருத்து கேட்கப்படவில்லை!

### உயர்தர கல்வி மசோதா குறித்து பெற்றோர் ஆசிரியர் சங்கம் அதிருப்தி

யாழ்ப்பாணம், திங்கள்

உத்தேச உயர்தர கல்வி மசோதாவை பொதுமக்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்தாலோசிக்கவும் தங்கள் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் தெரிவிக்க சந்தர்ப்பம்அளிக்கவும் விடாது பாராளுமன்றத்தில் உடனடியாக சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்கும் முறையை யாழ்ப்பாண பெற்றோர் ஆசிரியர் சங்கம் மிகவும் வன்மையாகக் கண்டித்திருக்கிறது. அதேசமயத்தில் இதுசம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுமக்கள் தங்கள் கருத்துக்களையும் தெரிவிக்க சந்தர்ப்பமளிக்க வேண்டுமெனவும் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானம் யாழ்ப்பாணம் பெற்றோர் ஆசிரியர்சங்க ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு திரு. எஸ். ஏச். பேரின்பநாயகம் தலைமைவகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:—

யாழ்ப்பாண பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒரு பிள்ளையின் போதனா மொழி தாய் மொழியாக இருக்க வேண்டுமென்ற உத்தேசித்த கல்வி

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்தியத்தூதர் சச்சார் யாழ்ப்பாண விஜயம்

குரும்பசிட்டி, ஞாயிறு

இலங்கையிலுள்ள இந்தியத்தூதுவர் டாக்டர் பீம்சென். சச்சார் ஆகஸ்ட் மாதம் 23-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார்.

தமது பாரியாருடனும், கலாசாரப்பகுதி அதிகாரியுடனும் இங்கு வரவிருக்கும் டாக்டர் சச்சார் காங்கேசன்துறை சிமெந்து கூட்டுஸ்தாபன விருந்தினர் விடுதியில் தங்கிருப்பார். சுமார் ஆறுநாட்கள் வரை யாழ்ப்பாணத்தில் தங்கிநிற்கவிருக்கும் இவருக்கு இலங்கை — இந்திய நட்புறவுச் சங்க யாழ். கிளையினரும், இலங்கை இந்தியர் சங்கத்தாரும் வரவேற்புபசாரம் அளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இலங்கை காந்திசேவா சங்கமகா நாட்டில் கலந்து[illegible] இவருடைய முக்கிய நிகழ்ச்சியாக விருக்கும்.

சுன்னாகம் இராமநாதன் மகளிர்கல்லூரி வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்வதுடன் கிளிநொச்சியில் உள்ள காந்தி சேவா சங்க ஆச்சிரமத்திற்கும் இந்தியத் தூதுவர் விஜயம் [illegible]

## ஜி.ஜி, லண்டன் செல்வார்?

கொழும்பு, ஞாயிறு

யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி ஜி. பொன்னம்பலம்விரைவில் லண்டனுக்கு செல்லக்கூடும் என்று கருதப்படுகின்றது.

அவருடைய புத்திரி திருமதி விஜயலக்ஷ்மி சிவப்பிரகாசபிள்ளை சுகவீனமுற்றிருப்பதே அவர் லண்டன் செல்லவிருப்பதற்கு காரணமென்று கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கைத்தொழில் ஸ்தாபனம்

ஓர் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்- பெறுமதியுள்ள லைசென்சுடன். தொழில் தொடர்ந்துநடைபெறுகிறது. போட்டியே இல்லாத தொழில். விபரங்களுக்கு விளம்பர இல: 762, ஈழநாடு மே/பா என்றவிலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

762

எஞ்ஜின்

57 குதிரைப் பவர் விஸ்ரார் எஞ்சின் 8 பேஸ், றேடியேற்றர் கூல், செல்வ்ஸ்ராட், 48 கிலோ உவாற் ஜெனறேற்றர் செற், சுவிச்போட்டுடன் சோமசிறீ 7-ம் நம்பர் கல்லர் புதியது. பெனன்சூலர் இன்டஸ்ரியல் கம்பனி லிமிட்டெட், மந்திகை, பருத்தித்துறை.

763

மெசின் வண்டிகள்

10'' உயரமும் 2'' கனமும் கொண்டறபர்ரையர் சில்லுகள் பொருத்தப்பட்ட தண்ணீர் இறைக்கும் மெசின் வண்டிகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. வேலமுகன் தொழிற்சாலை, சுன்னாகம். ஒன்றின் விலை ரூபா 150/-

760

## விற்பனைக்கு

வியாபார ஸ்தாபனம்

சாவகச்சேரி-கண்டி வீதியில் தெய்வேந்திரா தியேட்டருக்கு முன்பாக, வசதியான பெரிய பலசரக்கு வியாபார ஸ்தாபனம் சகல தளபாடங்களுடனும் கமிஷனுக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரடியாகத் தொடர்புகொள்ளவும்: ச. நவரத்தினம், தேநீர்க்கடை, பஸ் ஸ்டாண்ட், கொடிகாமம்.

761

காணி

10 பரப்பு கட்டடம் கட்டக்கூடிய நல்ல காணி 'மாதர் ஒழுங்கை' மானிப்பாயில் உண்டு. விபரங்கட்கு - மாதர் 110 மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

751

காணி

கோவில் வீதியில் (Temple Road) கைலாய பிள்ளையார் கோவிலருகில் இரண்டு பரப்பு காணி புதிய கிணறு நல்ல தண்ணீர். விசாரணைகள் 29, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

758

மாணவ ஆசிரியர்

மேற்படி பரீட்சையின் விண்ணப்பப் படிவத்திற்கு 10 சத முத்திரை 5 ஐ அனுப்பி பெற்றுக் கொள்ளவும். புதிய தமிழ் தட்டச்சு யந்திரங்களும் விற்பனைக்குஉண்டு. மா. புவனேந்திரன், வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி.

769

REGAL—JAFFNA
NOW SHOWING
FERNANDEL
in
THE
COW AND I

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 9-30'
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம் ஜி ஆர் – சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
நாகேஷ் - கே.ஆர். விஜயா
நடித்த
சர்வர் சுந்தரம்

## டில்லியில் பிரீமன் பேச்சு

புதுடில்லி, ஜூலை 17

இந்தியாவின் உணவுத் தேவை, விளைபொருள் உற்பத்திப் பெருக்கம் ஆகிய விஷயங்கள் குறித்து அமெரிக்க உணவுமந்திரி திரு. பிரீமன், திட்டமந்திரி அசோக்மேத்தாவுடனும், உணவுமந்திரி சுப்பிரமண்யத்துடனும் பேச்சு நடத்தினார்.

பின் இந்தியாவின் உணவு உற்பத்தி முயற்சியை அவர் பாராட்டினார்.

3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)

பி. ப. 2, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்...... எதற்கோ அழுதாள். ஆனால் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.

மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறு கதைதான்

ஆடலழகி ஜெயலலிதா,
புதுமுகம் ஸ்ரீகாந்த்
நிர்மலா, மூர்த்தி, ஆஷா
மற்றும் பலர் நடித்த
சித்ராலயா அளிக்கும்
ஸ்ரீதரின்

"வெண்ணிற ஆடை"

(ஈஸ்ட்மன் கலர்)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

## பொலிகண்டியில் ஒருவர் பலி

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறைக்கு அருகாமையிலுள்ள பொலிகண்டி என்னுமிடத்தில் நேற்றுமுன்தினமிரவு 35வயதான கந்தவனம் பாலசிங்கம் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இச்சம்பவம் சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு ரூபர்ட் சில்வா ஸ்தலத்தில் விசாரணை நடத்தினார். மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சோமசுந்தரம் பிரேத பரிசோதனை செய்தார். வல்வெட்டித்துறைப்பொலிசார் புலன் விசாரணை செய்துவருகிறார்கள்.

## குளத்தைத் திருத்த முயற்சி

கனகராயன்குளம், ஞாயிறு

மாங்குளத்திலிருந்து ஏறக்குறைய, பதினெட்டு மைல்களுக்கப்பால் ''சின்னவன் குளம்'' என்ற ஒரு பழைய, பண்டைய மன்னர்களால் கட்டப்பட்ட குளத்தை நீர்ப்பாசன இலாக, புதிய நீர்மாணத்திட்டத்தில் சொய்வதற்கு எத்தனித்துள்ளனர். இதற்கான ஆக்க வேலையில் வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. வி. எஸ். வேலுப்பிள்ளை, ஈடுபட்டுள்ளார். இக்குளம்முந்கால் மைலளவு, அணைக்கட்டைக் கொண்டதென்றும் முக்கால்மை நீளத்தை கொண்டதென்றும், தெரியவருகிறது

## சிக்காகோ படுகொலை

சிக்காகோ, ஜூலை 17

8 மாணவதாதிகளை சிக்காகோவில் கொலைசெய்ததாகக்கூறப்படும் 25 வயதான நபரை, நகர பொலிசார் அடையாளம் கண்டுபிடித்திருக்கிறார்கள் என அறிவிக்கப்பட்டது.

பி. டி. ஸி.

## யூகோவில் களையெடுப்பு

பெல்கிரேட், ஜூலை 17

பெல்கிரேட் பாதுகாப்பு சோவியத்தலைவர் பதவியிலிருந்து தள்ளப்பட்டிருப்பதாய் யூகோஸ்லேவியாச் செய்தி கூறுகிறது.




## கொழும்பு

திங்கள் 18-7-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

6-45 ஞானாஞ்சலி, 6-50 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 நேயர் விருப்பம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம். 5-45 திரைஇசை

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை பாடல், 7 45 கலை ஏடு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 தமிழ் மூலம் விஞ்ஞானம், 9-45 ... விருப்பம் 10-00 நேயர் விருப்பம்.

# விளம்பரம்

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

வல்வெட்டித்துறை சின்னத்துரை செல்லப்பா மகள் மின்னற்கொடி - பராபரிப்பக்காரன் சின்னத்துரை செல்லப்பா.

வழக்காளி

இல. 9102

எதிராக

1 உடுவில் ஆசிரியர் ஆறுமுகம் சின்னத்தம்பி

2 ஷியூர் ஆறுமுகம் சின்னத்தம்பி பெண் தவமணி

3 உடுப்பிட்டி இளைப்பாறிய ஆசிரியர் வயிரமுத்து றிச்சேட் இராசரத்தினம்.

4 வல்வெட்டித்துறை தெணி- சந்தனசாமி பிரான்சிஸ்

5 ,, பெண் தயலோசநாயகி

6 ,, ஆறுமுகம் நாராயணசாமி

7 ,, பெண் செல்வரத்தினம்

8 ,, காட்டுவளவு கெங்காதரம் வயித்தீஸ்வரம்

9 ,, பெண்சாந்தமணி

10 உடுப்பிட்டி, யாழ்ப்பாண ரோட் சின்னையா கதிரவேற்பிள்ளை மகள் வரதலட்சுமி

11 வல்வெட்டித்துறை இளைப்பாறிய உத்தியோகஸ்தர் சங்கரநமசிவாயம் வயித்திலிங்கம்

12 உடுப்பிட்டி இளைப்பாறிய ஆசிரியர் அரியநாயகம் ஏபிரகாம் அருட்பிரகாசம்

13 வத்தகம இளைப்பாறிய தபால் அதிபர் தர்மரத்தினம் அல்பிறட் மாசிலாமணி

எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று உடுப்பிட்டியிறை ஆவிளியந்தறை நி.ப.14 1/4 ஷி நி.ப. 7 1/8 எனும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1966-ம் ஸு புரட்டாதி 3-ம் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருக்கிறார்கள். இக்காணியில் இன்னும் பங்குள்ளவர்களும் மேற்கூறப்பட்ட திகதியில் சமுகமளிக்கலாம்.

கோட்டாரின் கட்டளைப்படி

மு. ஸ்ரீபத்மநாதன்
சக்கிடுத்தாருக்காக

1966-ம் வருஷம்
ஆடி மீ 13-ந் திகதி

## காங்கேசன்துறையில் மாவுக் கப்பல்

மாவிட்டபுரம், சனி

''எம். வி. குயின்ஸ்பேறி'' என்னும் பிரிட்டிஷ் கப்பல் ஆஸ்திரேலியாவிலிருந்து 9652 தொன் கோதுமை மாவு ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினமிரவு காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு வந்தடைந்தது.

இப்பருவகாலத்தில் காங்கேசன்துறைக்கு வரும் மூன்றாவதும் முதலாவது மாவுக் கப்பலும் இதுவாகும்.

## கச்சாய் கிராமசபை கேள்வி விளம்பரம்

''பாலாவி அரசினர் நன்கொடை 65/66 ரோட் வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 30-7-66 சனிக்கிழமை காலை 10-00 மணிவரை கச்சாய் கிராமசபை கந்தோரில் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்

29-7-66 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ரூபா 60-கட்டி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இக்கட்டுப் பணத்தில் கேள்விப்பத்திரப் பணமாகிய ரூபா10/- திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. முழு விபரங்களையும் கச்சாய் கிராமசபைக் கந்தோரில் கந்தோர் நேரங்களில்அறிந்துகொள்ளலாம்'

(ஒப்பம்)
அ. த. சிதம்பரப்பிள்ளை
கச்சாய் கிராமசபைத்
தலைவர்

672

## மலைநாட்டு கவிஞர் காலமானர்

கொழும்பு, சனி

மலைநாட்டு கவிஞர் திரு. பி. ஆர் பெரியசாமி காலமானார். சில தினங்களாக சுகயீனமுற்றிருந்த இவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலேயேகாலமானார். இவருக்கு வயது 55. மலைநாட்டு மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாக வைத்துப் பல உணர்ச்சிக் கவிதைகளை இவர் படைத்திருக்கிறார். 'தேயிலை விடு தூது' என்ற இவரது கவிதை பலரையும் கவரக் கூடியதாக விருந்தது. சமீபத்தில்கொழும்பில் இவருக்கு பொன்னாடைபோர்த்து. கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

### எம். பி. அனுதாபம்

அவரது மறைவு குறித்து சாவகச்சேரி எம். பி. திரு. வி.என். நவரத்தினம் அனுதாபச் செய்தியொன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

''மலைநாட்டு மக்களின் கஷ்ட நஷ்டங்களை கவிதையுருவில் உணர்ச்சி ததும்ப படைத்த கவிஞரின் இழப்பு மலைநாட்டு மக்களுக்குப் பேரிழப்பாகும். அவர் பிரிவு மலைநாட்டு மக்களுக்கு ஒரு பெருநஷ்டம்'' என்று இச் செய்தியில் எம். பி. திரு. நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

## நோயாளிகள் கஷ்டம்

இமையாணன், ஞாயிறு

வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் வைத்தியசாலையில் டாக்டர்களும் மற்றும் ஊழியர்களும் போதியளவு இல்லாத காரணத்தால் அங்கு கருமங்கள் உடனுக்குடன் நடத்த முடியாமல் இருக்கின்றது. இதனால் முக்கியமாக நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நோயாளிகள் காலை ஏழு மணிக்கே வந்தாலும் நீண்ட 'கியூ'வில் நின்றும் மத்தியானத்திற்கே வீடு திரும்பமுடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

பல பகுதிகளிலிருந்தும் வரும்ஏராளமான நோயாளர்களுக்கென இந்த ஆஸ்பத்திரியில் இரண்டு டாக்டர்களும் வேறு சில ஊழியர்களுமே கடமையாற்றுகின்றனர்.

## நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் நல்லூர் புதிய விவாகப் பதிவுகாரராக திரு. மு. கி. கார்த்திகேசு நியமிக்கப்பட்டுள்ளார். விவாகப்பதிவு காரராகவிருந்த திருமதி லட்சுமிஅம்மா நடராசா காலமானதைத் தொடர்ந்து இப்புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க கைதிகள்

# யுத்த குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட்டால் 3-வது உலக யுத்தம்!

## 'வேண்டாம்' என ஹானேய்க்கு யுதாண்ட் வேண்டுகோள்

### வாஷிங்டனில் பெரும் எதிரொலி: வட வியட்னும் பாலைவனமாகுமாம்

நியுயோர்க், ஜூலை 17

வடவியட்னுமிபர் கைப்பற்றியுள்ள அமெரிக்க கைதிகளின் விவகாரம், இப்போது அபாயகரமான நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. இவர்கள் கைதிகளாக நடத்தப்படமாட்டார்கள் என்றும், யுத்தக்கைதிகளாகப் பாவிக்கப்பட்டு கொல்லப்படுவார்கள் என்றும் வடவியட்னும் அறிவித்திருப்பது தீவிர விளைவுகளுக்கான அபாயத்தை உருவாக்கிவருகிறது

''அமெரிக்க கைதிகளை யுத்தக் கைதிகளாக்கவேண்டாம். 3-வது உலக யுத்த விளைவுகளுக்கே இது வழிகோலும். ஏற்கனவே இந்த அபாயம் ஏற்பட்டிருக்கிறது. கைதிகளை ஜெனிவா கோட்பாடுகளின் அடிப்படையில் நடத்தவேண்டும்'' என வடவியட்னுமுக்கு ஐ. நா. அதிபர் யுதாண்ட் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அமெரிக்க முப்படைகள் கமிட்டித்தலைவர்செனட்டர் ரஸ்ஸலும், மற்றும் மூன்று செனட்டர்களும் வடவியட்னுமுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையில், வடவியட்னுமிலுள்ள அமெரிக்க கைதிகள் விஷயம் அமெரிக்காவில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறதென்றும், இவர்கள் கொல்லப்பட்டால் வடவியட்னும் பாலைவனமாகும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

யுத்தக் கைதிகள் பற்றி ஐக்கிய அராபியக்குடியரசு நேற்று வடவியட்னுமுக்கு அமெரிக்காவின் 2-வது குறிப்பு ஒன்றைக் கையளித்தது. ஆனல் இவர்கள் எவரும், சிறைக்கைதிகள் அல்ல என்றும், யுத்தக்கைதிகளாகவே கருதப்படுவார்கள் என்றும் ஹானேய் தெரிவித்துள்ளது. வியட்னும் யுத்தத்தில் இதுவரை 274 பேர் கைதிகளாகவோ, காணமற்போயோ உள்ளார்கள் என வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க கைதிகள் யுத்தக் குற்றவாளிகளாக தண்டிக்கப்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என வெளிநாட்டு மந்திரி ரஸ்கும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

## குண்டு வீச்சை நிறுத்த இந்திரா-கோஸிஜின் வேண்டுகோள்

### இந்தியப் பிரதமர் டில்லி திரும்பினர்

புதுடில்லி, ஜூலை 17

இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி, தமது 9 நாள் வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு நேற்று நள்ளிரவு புதுடில்லி வந்து சேர்ந்தார்.

தமது பயணம் வெற்றிகரமாக முடிந்ததென்றும், நண்பர்களுடன் கருத்துப்பரிவர்த்தனை செய்து கொள்ளவே தாம் சென்றதாயும் இதனல் பரஸ்பரம் பலன் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய அராபியக் குடியரசு, யூகோஸ்லேவியா, சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு அவர் சென்றிருந்தார். பாகிஸ்தானுக்கு ரஷ்ய ஆயுதசப்ளை வழங்கவில்லை என சோவியத்தலைவர்கள் தம்மிடம் கூறியதாயும், காஷ்மீர் விஷயமாக தங்கள் நிலையில் மாற்றம் இல்லை என்றும் அவர்கள் உறுதியளித்ததாய் ஸ்ரீமதி கூறினர்.

### வியட்னும் யோசனை

வியட்னும் சம்பந்தமான தமது யோசனைக்கு உடனடி விளைவுகளைத் தாம் எதிர்பார்க்கவில்லையென்றும், நல்ல விளைவு ஏற்படும்வரை தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினர்.

''வடவியட்னுமின் சம்மதமின்றி ஜெனிவா மகாநாட்டைக் கூட்டுவது சம்பந்தமாய் ரஷ்யா எதுவும்செய்ய முடியாது என்ற சோவியத் தலைவர்களின் கருத்து ஏற்கக் கூடியதே. அதேசமயம் அங்கு குண்டுவீச்சு நிற்காமல் மகாநாடு கூட்டுவது சாத்தியமில்லை. வியட்னும் சம்பந்தமாகஎனதுயோசனை அப்படியே மாருமல் இருக்கிறது'' என்றும் ஸ்ரீமதி காந்தி கேள்விக்குப் பதிலளிக்கும்போது கூறினர்.

### கூட்டறிக்கை

ஸ்ரீமதி இந்திராகாந்தியும் ரஷ்யப்பிரதமர் கொஸிஜினும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் வடவியட்னுமில் குண்டுவீச்சு உடன் நிறுத்த வேண்டும் எனக் கோரியிருக்கிருர்கள். ஹானேயிலும், ஹைபாங்கிலும் குண்டுவீச்சு தீவிரமாகியிருப்பதால்தென் கிழக்காசிய நிலைமை மோசமாகிவிட்டது என்றும் அவர்கள் கூறியிருக்கிருர்கள்.

ஜெனிவா (1954-ம்) யோசனைகளின் கட்டமைப்புக்குள் வியட்னும் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். சமாதான சகவாழ்வு, ஒருநாட்டின் உள்விவகாரத்தில் இதர நாடுகள் குறுக்கிடாமை ஆகியவற்றை இருதலைவர்களும் வற்புறுத்தியிருக்கிருர்கள்.

### மூவருக்குச் செய்தி

ஸ்ரீமதி இந்திராகாந்தி விமானத்தில் புறப்பட்டபின் சோவியத் பிரதமர் கொஸிஜின், உஸ்பெக்குடியரசுத் தலைவர் ஆகியோருக்குச் செய்திகள் அனுப்பினர். டாஷ்கண்ட் உடன்பாட்டை இந்தியா தொடர்ந்து பின்பற்றி வரும் என்றும் இவ் விஷயமாக சோவியத்துக்கு நன்றி தெரிவித்தும் அவர் கோஸிஜினுக்குச் செய்தி அனுப்பினர்.

இதற்கு முன் ஸ்ரீமதிகாந்தி கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் பிரஸ்னேவுடன் நீண்ட சம்பாஷணை நடத்தினர்.

### 100 கோடி ரூபிள் உதவி

இந்தியாவுக்கு ரஷ்யா சுமார் 100 கோடி ரூபிள்கடனளிக்கும் என்றும் ஸ்ரீமதி காந்தி அறித்தார்.

பாகிஸ்தான் உயரே பறந்துஉரும்போது அதிபர் அயூப்கானுக்கும் அவர் செய்தி அனுப்பினர்.

இரு நாடுகளும் நல்ல அண்டை நாடுகளாகச் சேர்ந்துவாழ வேண்டும்என்றும் சமீப வருங்காலத்தில் இருநாடுகளுக்கும்தொடர்பு வளரும் எனத் தாம் எதிர்பார்ப்பதாயும் அச்செய்தியை அவர் கூறினர்.

### மாஸ்கோவில் வில்சன்

ஸ்ரீமதி காந்தி மாஸ்கோவை விட்டுப் புறப்பட்டபின் பிரிட்டிஷ்பிரதமர்திரு. வில்சன் மாஸ்கோவில் இறங்கினர். திரு. கொஸிஜினுடன் அவர் 45 நிமிடம் சம்பாஷித்ததாக அறிவிக்கப்பட்டது.

## வட வியட்னுமில் படைதிரட்ட ஹோசிமின் உத்தரவு

### ''சமாதானப் பேச்சும் இல்லை சரணுகதியும் இல்லை''

ஹானேய், ஜூலை 17

வடவியட்னுமில், அதிபர் ஹோசிமின் படைதிரட்டும் உத்தரவு பிறப்பித்திருக்கிருர். சமாதானப் பேச்சே கிடையாது என்றும், வடவியட்னும் தரைமட்டமாக்கப்பட்டபோதிலும் ஒருபோதும் அது சரணுகதி அடையாது என்றும் டாக்டர் ஹோ அறிவித்தார்.

''நகரங்கள் தரைமட்டமாக்கப்படலாம். இந்த அழிவுக்குத் தயாராய் இருங்கள்'' என தமது மக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் வடவியட்னும் எல்லைக்கருகே 10,000 வியட்காங்குகள் குழுமியுள்ள பகுதியை அமெரிக்கத் துருப்புக்கள் தாக்க ஆரம்பித்திருக்கின்றன 121 இலக்குகள் வடவியட்னுமில் குண்டுவீச்சுக்கு உள்ளாகியது. வடவியட்னுமுக்கு போலந்து ஏற்கனவே ஆயுதங்கள் அனுப்பியிருப்பதாயும் தொடர்ந்து ராணுவ சப்ளைகளை அனுப்பப்போவதாயும் போலந்து தலைவர் கோமுல்லா நேற்று அறிவித்தார்.

இதற்கிடையில் வியட்காங் தேசிய விடுதலை முன்னணியின் உயர் தலைவர்கள் முழு அவசரக்கூட்டம் ஒன்றை நடத்தி வியட்னும் யுத்த நிலைபற்றி விவாதித்தார்கள். எதிர்காலத் திட்டம் குறித்து அவர்கள் விவாதித்ததாகத் தெரிகிறது.

### உலக கப்

மான்செஸ்டர், ஜூலை 17

நேற்று நடைபெற்ற உலக உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகளில் ரஷ்யா இத்தாலியை 1—0 கோல்களால் தோற்கடித்து 'கால்-இறுதி' போட்டிக்குத் தகுதி பெற்றது.

இங்கிலாந்து 2—0 கோல்களினல் மெக்ஸிகோவை தோற்கடித்தது'

போர்த்துக்கல் 3—0 கோல்களினல் பல்கேரியாவைத்தோற்கடித்தது.

அர்ஜண்டீனவுக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையே நடைபெற்றபோட்டியில் எக்கோஷ்டியும் கோல்போடவில்லை.

### பாக். ஊடுருவல்

புதுடில்லி, ஜூலை 17

40 பேரடங்கிய பாகிஸ்தானியர் கோஷ்டி ஒன்று படகு மூலம் ஆறு ஒன்றைக் கடந்து இந்தியப்பகுதிக்குள் பிரவேசித்தாயும், பாதுகாப்பு படைகள் 5 முறை சுட்டதுடன் இருபடகுகளை அப்படியே விட்டுவிட்டு அவர்கள் ஓட்டம் பிடித்ததாயும் அறிவிக்கப்பட்டது.

### சீன-சோவியத் எல்லைப் பிரச்னை

லண்டன், ஜூலை 17

''அண்டை நாடுகளுடனை எல்லைப்பிரச்னைபற்றிய சீனவின் கருத்து இன்றைய பெரும் அரசியல் பிரச்னையாக விளங்குகிறது'' என லிபரல் பத்திரிகை ''கார்டியன்'' தனது ஆசிரியத் தலையங்கத்தில் கூறியிருக்கிறது.

''சீன-இந்திய எல்லைப் பிரச்னையும் விரைவில் கொந்தளிப்புக்கு வரும்'' என அது மேலும் கூறியிருக்கிறது. பி. டி. ஸி.

### விடுதலைக்குப்பின் கைது!

கம்பாலா, ஜூலை 17

உகண்டாவின் முன்னள் ஐந்து மந்திரிகளை உயர் நீதிமன்றம் விடுதலை செய்தபின், அரசாங்கம் மீண்டும் அவர்களைக் கைது செய்து காவலில் வைத்தது. முன்பு இவர்கள் காவலில் வைக்கப்பட்டது செல்லாது என்று நீதிமன்றம் கூறி அவர்களை விடுதலை செய்திருந்தது.

பி. டி. ஸி.

### கோடீஸ்வர வர்த்தகர்கள் கைது

புதுடில்லி, ஜூலை 17

கள்ளமார்க்கெட் வர்த்தகத்தில் ஈடுபட்ட 88 வர்த்தகர்கள் நேற்றுப்பகுதியில் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில்12 பேர் கோடீஸ்வரர்களாகும்.

### எதிர்க்கட்சி வெளி நடப்பு

டாக்கா, ஜூலை 17

கிழக்குப் பாகிஸ்தான் சட்ட சபையில் நேற்று எதிர்க்கட்சியினர் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர். கைதுசெய்யப்பட்ட அரசியல் வாதிகள் பற்றி அரசாங்கம் எண்ணிக்கை தரத் தவறியதே இதற்குக் காரணம்.

### நைஜீரியா

லேகாஸ், ஜூலை 17

நைஜீரியா ஐரோப்பிய பொதுச்சந்தையில் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்திருக்கிறது. இதில் சேர்ந்த முதலாவது காமன்வெல்த்நாடு நைஜீரியாவே.

### 12 நாகர் கைது

ஷில்லாஸ், ஜூலை 17

வெடிப்பொருட்களை வைத்திருந்த 12 பகை நாகர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## 'லைப்' பத்திரிகைமீது ரூ. 6 கோடி வழக்கு!

நியூ யார்க், ஜூலை 1

பிரபல அமெரிக்க சஞ்சிகையான ''லைப்'' மீதும் அதன் ஆசிரியப் பகுதி ஊழியர்மீதும் 1 கோடியே 20 லட்சம் டாலர் (சுமார் ரூ. 6 கோடி) மானநஷ்டவழக்கு ஒன்று தொடரப்பட்டிருக்கிறது.

குவாய்த்தின் முன்னள் கல்விமந்திரி ஷேக் அப்துல்லா அல்ஜாபீர் அல்சபா, நியூயோர்க் ராஜ்ய சுப்ரீம் கோர்ட்டில் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருக்கிருர்.

1965-ம் ஆண்டு செப்டம்பர் 17-ம் திகதி தம்மைப்பற்றி எழுதியிருந்த [illegible] கட்டுரை. ஒரு கௌரவமான பிரஜை, அரசாங்க அதிகாரி, ஷேக் என்ற [illegible]ன் அந்தஸ்துக்கு மாசு கற்பித்துவிட்டதாக தனது [illegible] அவர் கூறியிருக்கிருர்.

(பி டி ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தொழிலாளர் போதிய ஊதியத்துக்காகவும், உரிமைகளுக்காவும் போராடும் அதே சமயத்தில் அவர்கள் தங்கள் பொறுப்புக்களையும், கடமைகளையும் உணர்ந்து உண்மையாக உழைத்து தொழில் அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியத்தையும் உணரவேண்டும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

பராபவ ஆண்டு ஆடி மீ 2 உ. (18-7-66)

## தீண்டாமை

தமிழ் மக்களிடையே நிலவும் தீண்டாமைக்கொடுமையை ஒழிக்க சட்டமூலம் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இதற்கான முயற்சிகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. திருச்செல்வமும் மற்றும் தமிழரசு கட்சித் தலைவர்களும் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் தங்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் தெரிவித்துள்ளனர். தமிழ் சமூகத்தின் சாபக்கேடாக இருக்கும் தீண்டாமையை ஒழித்துக்கட்டவேண்டியது அவசியமே. இதற்காக எடுக்கப்படும் எந்த முயற்சிகளுக்கும் சமுதாய ஒற்றுமையிலும் வளர்ச்சியிலும் அக்கறையுடையோர் அனைவரும் நிச்சயம் ஆதரவளிப்பர்.

தீண்டாமைத்தீமை இலங்கையில், வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தான் மோசமாக உள்ளது. சில ஆண்டுகளுக்குமுன் இருந்த நிலையைவிட இன்று இந்த தீண்டாமைப் பழக்கம் குறைந்துள்ளது என்பது உண்மையே. ஆயினும் இதை முற்றாக ஒழித்தால் தான் தமிழ் சமுதாயத்தில் ஒற்றுமை நிலவும், சமுதாயம் முன்னேற்றமடையும். பிரசித்திபெற்ற ஆலயங்களின் கதவுகள் சகலருக்கும் திறந்துவிடப்பட்டும் சில ஆண்டுகளாகிவிட்டன. எனினும் ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்ற நிலை சகல ஆலயங்களிலும் இன்னும் ஏற்படவில்லை. உணவு விடுதிகளும் தேநீர்ச்சாலைகளும் பல இடங்களிலும் பாகுபாட்டை நீக்கிவிட்டனவென்றாலும் இன்னும் சில இடங்களில் பாத்தல்களிலும் கறன் பிடித்த தகரப்பேணிகளிலும் தண்ணீர் கொடுக்கும் வழக்கம் இருக்கவே செய்கின்றது. எனவே தீண்டாமையைச் சமுதாயப் புரட்சி மூலம் ஒழித்துக்கட்டிவிட இதுவரை கொண்டிருந்த கனவு நிறைவேறும் அறிகுறிகளில்லாததால் சட்டத்தின் மூலமே அதை ஒழித்துக்கட்டலாமென்ற முடிவுக்கு வருவதைத்தவிர வேறுவழியில்லை. சட்டம் வேண்டியதுதான், ஆயினும் சட்டத்தினால் மட்டும் இப்பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. மக்களின் மனம் மாற வேண்டும். இதற்கு சமூக சமய ஸ்தாபனங்களும் பெரியார்களும் இளைஞர்களும் முன்வந்து முயற்சி செய்யவேண்டும்.

இதேசமயம் இதுவரை காலமும் இப்பழக்க வழக்கங்களினால் ஒடுக்கப்பட்டுவந்த மக்களும் தங்களிடமுள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கிக்கொள்வதும் அவசியம். ''நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள், சிறுபான்மைத்தமிழர்கள்'' என்று தங்களுக்குள் பல ஸ்தாபனங்களை அமைத்துக்கொண்டு தங்கள் பெயரைப்பறை சாற்றித்திரிவதும் தீண்டாமையை ஒழிக்கஉதவி செய்யாது. சிறுபான்மைத் தமிழ் மக்களிடையிலும் சாதிப் பாகுபாடு பல உட்பிரிவுகளாக விளங்குகின்றன. அவற்றையும் ஒழித்துக்கட்டவேண்டும்.

அமைச்சர் திருச்செல்வம் கூறுவதுபோல தீண்டாமை இன்னும் பல காலத்துக்கு நீடிக்காதென்பது உண்மையே. இதற்கு சட்ட நடவடிக்கையும் அவசியம். சட்டம் வெறும் சட்டமாக இருக்காமல் சரியான முறையில் செயல்படவும் வேண்டும். அதற்கு மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் வேண்டும்.

## கூட்டுறவும் ஜனநாயகமும்

ஜனநாயக சோஷலிஸ வாழ்க்கைக்கு கூட்டுறவு வாழ்க்கை முறை ஆணிவேர் போன்றது எனவும் பொருளாதார சுதந்திரமில்லாமல் ஜனநாயகம் நிலைக்க முடியாதென்றும் பிரதமர் டட்லி சேனநாயகா கண்டியில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவில்பேசுகையில் தெரிவித்திருக்கிறார். முதலாளித்துவ முறை மக்களின் நலனைப் பேணத்தவறிவிட்டதென்றும் இதற்கு மாற்று வழி எல்லாவற்றையும் தேசியமயமாக்குவதல்லவென்றும் பிரதமர்தெரிவித்திருக்கிறார். உண்மை நிலையை உணர்ந்து கூறியிருக்கும் பிரதமரின் இக்கருத்துக்கள் தீவிர பரிசீலனைக்குரியன.

ஜனநாயக சோஷலிசம் தான் நமது நாட்டுக்குப் பொருத்தமானதென்பதே பிரதமரின் தெளிவான விளக்கம். இந்தியா பின்பற்றிவரும் கொள்கையும் இதுவே. இதற்கு முன் இலங்கையில் ஆட்சிபீடத்திலிருந்த அரசாங்கங்களும் இதே கொள்கையைக்கொண்டிருந்தபோதிலும் முன்னைய அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் சோஷலிஸ வாழ்க்கைமுறையை அதிகம் பின்பற்றுவதாக அமைந்தன. ஜனநாயகமும்சோஷலிஸமும் இணைந்து செயல்படுவது சுலபமல்ல. இது ஒரு பரீட்சார்த்தமான முறையுமாகும். இதுசில வருடங்களின் பின்னர் வெற்றியளிக்கலாம், ஆனால் மக்கள் எதிர்பார்ப்பது உடனடி நிவாரணமும் முன்னேற்றமுமே. தனியார் துறைக்கும் அதேசமயம் அரசாங்கத்துறைக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதென்பது சுலபமல்ல. உண்மையான தேசாபிமானத்துடன் அரசாங்க அதிகாரிகளும் பொதுமக்களும் உழைத்தால்தான் இது வெற்றியளிக்கமுடியும். சிதைந்துபோயிருந்த தேசிய ஐக்கியத்தை மீண்டும் உருவாக்கியுள்ள பிரதமர் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டுமென்ற மக்களின் விருப்பத்தை இங்கு ஜனநாயக சோஷலிஸ வாழ்க்கைமுறை வெற்றியாக்குமென நம்புகிறார். கூட்டுறவு இதற்கு வழிகாட்டும். உண்மையான தேசாபிமானமும் தேசிய ஐக்கியமும் தான் கூட்டுறவையும் ஜனநாயகத்தையும் அதன் மூலம் பொருளாதார சுதந்திரத்தையும் [illegible] இதை அறிவார். நாட்டுமக்கள் அனைவரும் இதை உணரவேண்டும்.

# தொழிலாளர்களிடையே பரவும் சருமவியாதி

## பெல்கிரேட் பேராசிரியர் தரும் விளக்கம்

இன்று யூகோஸ்லேவியாவில் மனிதனின் வாழ்வின் சராசரி வயதுக்காலத்தில் 15 வயது இரண்டாவது உலக யுத்தத்திலும் பார்க்க அதிகரித்துள்ளது. அத்துடன் இறப்பு விகிதத் தொகையும் ஒவ்வொரு ஆயிரம் பேர்களில் பத்து வீதமாக குறைந்துள்ளது. இதற்கு பல காரணங்கள் உண்டு.

1945ல் யூகோஸ்லேவியாவில் 4000 வைத்தியர்கள் தான் இருந்தார்கள். ஆனால் இன்று 15,000 வைத்தியர்கள் இருக்கின்றனர். இருந்தும் ஓர் வைத்தியர் 1,200 மக்களுக்கே சேவை புரிய வேண்டியுள்ளது.

கடந்த இருபது வருடகாலங்களாக யூகோஸ்லேவியாவில் பெருந்தொகையான பணம் ஆஸ்பத்திரி, வெளிநோயாளர் பரிசோதனை நிலையங்கள், சுகாதார விடுதிகள் ஆகியன நிர்மாணிக்கப்படுவதில்செலவிடப்படுகின்றது. கடந்த பத்து வருடங்களில் மட்டும் வெளிநோயாளர் பரிசோதனை நிலையங்கள் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளன அங்கே இன்று 250 ஆஸ்பத்திரிகள், 370 பாடசாலை பரிசோதனை நிலையங்கள், 3,313 பொதுப் பரிசோதனை நிலையங்கள், 1,788 பல் பரிசோதனை நிலையங்கள், அத்துடன் 1,300 வேறுவிதமான நோய்களுக்கான பிரத்தியேக பரிசோதனை நிலையங்கள் ஆகியன உள்ளன என்று சௌக்கிய காப்புநிதி திட்டப் புள்ளி விபர வெளியீட்டிலிருந்து அறிய முடிகின்றது.

ஏப்ரல் மாதம் 7-ந் திகதி நடைபெற்ற உலக சுகாதார தினத்தன்று பெல்கிறேட் மருத்துவத் துறையின் சரும நோய்ப் பகுதியின் நிர்வாகியான பேராசிரியர் டாக்டர் ஸ்லோபோதான் பெதிசைக் இடம் இன்று பல நாடுகளில் அதிகரித்து வரும் அலேர்ஜி (Allergy) மற்றும் பல பிரத்தியேகமான மருத்துவத் துறைகளைப் பற்றியும், அதனால் ஏற்படும் பிரச்னைகள் பற்றியும் விளக்கம் கொடுத்துள்ளார்.

''சருமம் - மர்மஸ்தான வியாதிகள் சம்பந்தப்பட்ட சேவைகள் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்பு முன்னேற்றம் ஒன்றுமே நிகழவில்லை இன்று யூகோஸ்லேவியாவின் சௌக்கிய அமைப்பு சில வைத்தியர்கள் கையில் தான் உள்ளது. இவர்கள் குழந்தைப் பேறுக்கு, கர்ப்பிணிகள் பரிசோதனை நிலையங்கள், சத்திரசிகிச்சை, உள்நோய்கள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் முதலில் கொடுக்கின்றார்கள். இன்று சரும-மர்மஸ்தான வியாதிகளுக்கு நூறுக்குக் குறைவான வைத்தியர்களே உளர். கிராமப்புற மக்கள் பட்டணப் பகுதிகளுக்கும் கைத்தொழில் பகுதிகளுக்கும் குடியேறியதால் பல வகையான ஆம்பி, நோய்கள் அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளது. நாம் சரும-மர்மஸ்தானம் சம்பந்தப்பட்ட வியாதிகளைத் தடைப்படுத்துவதற்கும் இதுசம்பந்தப்பட்ட பாதுகாப்பு சேவை நிலையங்கள் உருவாக்குவதற்கும் அதிசிரத்தை காட்டவேண்டியுள்ளது. இந்த நோய் சம்பந்தப்பட்ட வெளிநோயாளர் பரிசோதனை நிலையங்கள் நிறுவ நோய் பரவாமல் தடுப்பதற்கு உடனுக்குடன் சம்பந்தப்பட்ட வியாதியஸ்தர்களை பரிசோதித்து நடவடிக்கைகள்எடுக்கப்படும்'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

''நோயினை சுகப்படுத்தும் மருந்தும், நோய்க்கு எதிரான பாதுகாப்பு மருந்தும் நாம் வழங்குகின்றோம். அத்துடன் மலை அடிவாரங்களில் உள்ள கிராமங்களுக்கும் ஒழுங்காகச் சென்று அங்குள்ளோர் சௌக்கிய நிலையினைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

இந்த மாதிரியாக சரும-மர்மஸ்தான வியாதிகளின் தடை சேவை, கைத்தொழில் சேவையில் உள்ள மருத்துவர்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் கைத்தொழில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மத்தியில் உள்ள இந்த நோயின் பிரதிபலிப்பினை ஆராய்வது சிரமமமாகவே இருக்கும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

— டாக்டர் எஸ். பரராசசேகரம்

## நெசவு கூட்டுத்தாபனத்தில் வேலை நிறுத்தம்

கொழும்பு, திங்கள் போனஸ் விஷயமாக ஆரம்பித்த தேசிய நெசவுக் கூட்டுத்தாபன வேலை நிறுத்தம், 35 நாட்களுக்கு மேலாகியும், உடனடித்தீர்வு காண முடியாததாகத் தெரிகிறது.

அரசாங்க கூட்டுத்தாபனங்களின் யூனியன் தலைவர் திரு. எம்.பி. சென்னின் கூற்றின்படி, தொழிலாளர்களையோ, தொழிலாளர் யூனியனையோ கலக்காமல், நெசவுக் கூட்டுத்தாபனத்தின் அதிபர் தன்னிச்சைப்படிபோனஸ்திட்டமொன்றைத் தயாரித்துள்ளாராம். இத்திட்டத்தின் கீழ், தொழிலாளரில் 78சதவீதத்தினருக்கு எவ்வித போனசும் கிடைக்கவில்லையென்றும், கிடைத்தவர்க்கும் 17 தொடக்கம் 42 சதம் வரை கிடைத்துள்ளதென்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தை யூனியன் நிராகரித்ததைத் தொடர்ந்து யூனியனுக்கும், கூட்டுத்தாபன அதிபர் தொழில் அமைச்சின் பிரதிநிதி திரு. எம். சந்திரசோமாவுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன இறுதித் திட்டமொன்றினை உருவாக்கும்வரை, ஒவ்வொரு தொழிலாளிக்கும் இடைக்கால ஒழுங்காக வருடம் ரூபாய் 25 வழங்கும்படி திரு சந்திரசோமா யோசனைகூறினார்.

ஆனால், யூனியன் வருடம் ரூபாய் 50 கோரியது இதை நிர்வாகம் மறுத்துவிட்டது. இப் பேச்சுவார்த்தைகளின் முறிவின் விளைவாகவே யூனியன் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது.

## நாட்டிலும் நகரிலும்

ஆடி—ஆவணி மாதங்களை 'ஸ்கந்த ஸீஸன்' என்று அழைக்கலாம். இந்நாட்களில் இலங்கை முழுவதிலும் வேலன் விழா கோலாகலமாகக்கொண்டாடப்படும். கதிர்காமத்தில் எழுந்தருளியிருக்கும் கார்த்திகேயப்பெருமான் - நேற்று பவனி புறப்பட்டுவிட்டார். அவரைத்தொடர்ந்து மாவிட்டபுரத்து மால்மருகனுக்கு விழா எடுப்பார்கள். அடுத்து நல்லூர் கந்தனின் செல்வக்களிவிழா. பின் தொண்டைமானாற்றில் குமரனுடைய கொண்டாட்டம். முருகக்கடவுளின் படைவீடுகளில் ஒன்றாகிய திருச்செந்தூரிலும் இக்காலத்தில் தான் திருவிழா நடக்கும்.

கதிர்காமத்தானில் ஒரு தனி விசேடம் என்னவென்றால் அவன் இலங்கைவாழ் இருபெரும் சாதிகளாகிய சிங்களவருக்கும் தமிழருக்கும் ஒரு பொதுத்தெய்வமாயிருப்பதே. ஆதிகாலந்தொட்டு சிங்களமக்கள் முருகனையும் தங்களது தெய்வங்களில் ஒன்றாக வழிபட்டு வந்திருக்கிறார்கள். பௌத்தர்களுடைய இல்லங்களில் புத்தர் படத்துடன் மகாவிஷ்ணுவின் படத்தையும் 'கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட' 'கதிர்காம தெய்யோ'வின் படத்தையும் காணலாம். கண்டியில் நடக்கும் பெரிய ஏசாலை பெறஹொராவில் முருகனுடைய திருவுருவமும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படுகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு முன் இலங்கையை ஆண்ட துட்டகைமுனு என்ற சிங்கள மன்னன் அனுராதபுரத்திலிருந்து தமிழரசனை விரட்டுவதற்கு கதிர்காம தெய்வத்திடம் வரம் கேட்டான் என்பதாக ஓர் ஐதிகக் கதையுமுண்டு.

இலங்கையின் வடகோடியில் ஒரு நயினாதீவு இருப்பதும் தென்கோடியில் ஒரு கதிர்காமம் இருப்பதும் தமிழரும் சிங்களவரும் இவ்விரு ஸ்தலங்களுக்குப் யாத்திரை போவதும் தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்கு மிகவும் அனுகூலமாய் அமைந்திருக்கிறது. இந்த அற்புதமான சந்தர்ப்பத்தை இரு சமூகத்தவர்களும் புனிதமாகப் பயன்படுத்தவேண்டும்.

உண்மையில் முருகனுக்கு சிங்களவர், தமிழர் என்ற பாரபட்சம் இருக்கமாட்டாது. அவர் இவ்வித அற்ப பிரிவினைகளுக்கு அப்பாற்பட்டவர் ஆகையினால் தானோ அவர் உருவமில்லாத 'கந்தழி' என்னும் கோலத்தில் கதிர்காமத்தில் காட்சியளிக்கிறார்? கந்தழி என்றால் ஒரு பற்றுக்கோடுமின்றி தத்துவத்துக்கும் அப்பாற்பட்ட உருவமற்ற பொருள் என்பது கருத்து.

'சண்முகற்கு சாதி யெது தான்?' என்று நாஞ்சில்நாட்டுக் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை முருகன் மீது பாடியுள்ள ஒரு நிந்தாஸ்துதியில் கேட்கிறார். அப்பாடல் வருமாறு:-

'தந்தை மலையாளி தாய்மா
மன் மாட்டிடையன்;
வந்த ஒரு மச்சானும் வாணி
யனே—சந்ததமும்
விண்முகத்தை எட்டும்
வேலேந்து பன்னிருகைச்
சண்முகற்குச் சாதியெது
தான்?'

(மலையாளி— வெள்ளிமலை உடைய சிவபெருமான், இடையன் - ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணன். வாணியன் - வாணியை நாவில் கொண்ட பிரமன்).

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தீண்டாமை குறைந்து வருகிறது; எனினும் முற்றாக நீங்கவேண்டும்"

## வரவேற்புக் கூட்டத்தில் எஸ். ஜே. வி.

யாழ்ப்பாணம், திங்கள்

"இந்த மண்டபத்தில் தீண்டாமை கிடையாது. எல்லா மக்களும் கலந்து இருக்கின்றார்கள். ஒரு அந்நியரிடம் இம்மண்டபத்தின் தீண்டப்படாத மக்கள் யார் என்று கேட்டால் பதில் சொல்ல முடியாது திகைப்பார்.

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு யோ ஞானப்பிரகாசம் தலைமையில் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு எம் திருச்செல்வத்திற்கும் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மேல்சபை உறுப்பினர்களுக்கும் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் திரு செல்வநாயகம்மேலும் கூறியதாவது:- மண்டபம் நிறைந்து வழியும் நிலையில் சனக்கூட்டத்தைக் காண மகிழ்ச்சியடைகிறேன். தீண்டாமை ஒழிந்துவருவது தான் இதற்குக் காரணம்.

தமிழரசுக் கட்சி எம். பிக்கள்தான் திரு திருச்செல்வத்தை அமைச்சராக நியமிக்க தங்கள் விருப்பத்தை தெரிவித்தனர். அமைச்சர் தமக்கு விடப்பட்ட கடமைகளை திறமையாக செய்து வருகின்றார். அவருடைய பணி மிகவும்கஷ்டமானது. தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக அவர் கஷ்டப்பட்டு உழைத்துவருகிறார். மாவட்டசபைகள் பெறுவதுதான் அவருடைய அடுத்த முக்கிய பொறுப்பு. மாவட்டசபைகள் என்ன மாதிரி அமையவேண்டும்; என ஆராய்ந்துஒரு மசோதா தயாரிக்க வேண்டியது அவரின் பொறுப்பு

மசோதாவில் என்னென்ன விஷயத்தை சேர்க்கவேண்டும் என ஆராயவேண்டியிருக்கின்றது மசோதா தயாரிக்கப்பட்டபின் பிரதமர் மந்திரிசபை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதற்காக நன்கு கவனம்செலுத்தி வருகின்றார்.

### தீண்டாமை ஒழிப்பு

சமூகத்திலிருந்து தீண்டாமை நீக்கப்பட வேண்டும். நீக்குவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை என்பது உண்மைதான் அதேநேரத்தில் தாழ்த்தப்படாத மக்களுக்கும் இது ஒருபெரும் பணி. இந்தியாவில் பிரதம நீதிபதியாக இருந்த ஒருவர் எங்கள் சமூகம், ஒருவருக்கு உரிமை கொடுக்காவிடில் விடுதலை பெறுவதை எதிர்பார்க்கமுடியாதெது என்று கூறினார்.

தீண்டாமை ஒரு அநாகரீகமான வழக்கம். இதனை ஒழிக்க வழிவகை செய்ய வேண்டும். இம்முயற்சியை கைவிடாமல் எப்பொழுதும் செய்யவேண்டும்.

### மும்முனைப் போராட்டம்

மட்டக்களப்பு எம் பி. திரு செ. இராசதுரை பேசும்போது கூறியதாவது: உலகத்தில் எந்தக் கட்சிக்கும் ஏற்பட்டிராத நிர்ப்பந்தம் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டது. இழந்த உரிமையைப் பெறுவதற்கும், தீண்டாமையை ஒழிப்பதற்கும் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் ஏககாலத்தில் நமது கட்சி மும்முனைப் போராட்டம் நடத்தவேண்டியிருந்தது.

1949 ம் ஆண்டுதீண்டமையை ஒழிக்க வெளிப்படையாக அதைக் கொள்கைத் திட்டங்களில் ஒன்றாக ஏற்றுக்கொண்டோம். 15 ஆண்டுகளுக்குமுன் நமது தலைவர்கள் சமபந்திபோசனம் அருந்தினார்கள். பின் திருமலையில் தோட்டிகள் மத்தியில் அவர்கள் தயார்செய்த உணவை அருந்தினோம். பல தலைமுறை காலம் வேரூன்றிவிட்ட தீண்டாமையை ஒரு தலைமுறைகாலத்தில் அகற்ற முடியாது. கிழக்கு மாகாணத்தில் சாதிக் கொடுமை இல்லை. படித்த வாலிபர்கள் முன்வந்தால், நான்கு தலைமுறையில் ஒழித்துக்கட்ட முடியும். சாதி வேற்றுமை தலையெடுத்தபின்தான் தமிழன் வீரம் குன்றியது; தமிழகம் வீழ்ந்தது; தமிழ் மக்கள் உரிமை இழக்கத் தொடங்கினார்கள். மீண்டும் தமிழன் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் தீண்டாமை ஒழிக்கப்படவேண்டும்.

### தமிழ்ப்பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம், நாம் தேசியஅரசாங்கத்திடம் கேட்ட ஒன்றல்ல. பத்து வருடங்களுக்கு முன் பல்கலைக்கழக இயக்கத்தை ஆரம்பித்தோம். தமிழ் பேசும் மக்களுக்குத் தேவையானது தமிழ்பல்கலைக்கழகந்தான்.

படித்த இளைஞர்கள் எல்லோரும் அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்க்க முடியாது. புல்மோட்டை, கிரியாய், திருமலை ஆகிய இடங்களில் உள்ள பூமிகளை வளம்படுத்த வரும்படி வாலிபர்களை அழைக்கின்றேன். வருங்காலத் தமிழ் மக்கள் வாழவேண்டுமானால் பொருளாதாரத்தைப் பெருக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் மாநகர சபையைக் கலைத்த முடிவு சரியானதே. அமைச்சர் கட்சி நலனுக்காக இதைச் செய்யவில்லை. நன்குயோசித்துப் பலமுறை சிந்தித்த பின்பே நடவடிக்கை எடுத்துள்ளார்.

### இனத்தை நசுக்கவிடோம்

நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசும்போது கூறியதாவது:

தமிழரசுக்கட்சியில் சாதி வேற்றுமை இல்லை. தீண்டாமையை ஒழிக்க சில நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளோம். சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினர் நசுக்கவிடமாட்டோம், அதுபோல்தான், எமது சமுகத்தில். சிறுபான்மையினரைபெரும்பான்மையினர் நசுக்கவிடமாட்டோம். தீண்டாமையை முற்றாக ஒழிக்க விரைவில் திட்டம்போட்டு நடவடிக்கை எடுப்போம். சாதி, மத இனப் பிரச்னைகள் நமது கட்சியில் இல்லை.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறியதாவது:

தமிழரசுக்கட்சி எம். பிக்கள் மந்திரி திருச்செல்வத்துடன் சேர்ந்து தீண்டாமையை ஒழிக்க ஒரு சட்டத்தை தயாரித்து பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து, பின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறோம். தீண்டாமையை சட்டபூர்வமாக ஒழிக்கத் திட்டமிட்டுள்ளோம் ஏற்கனவே உள்ள சட்டம் சரியாக அமுல்நடத்தப்படவில்லை.

### கிழக்கில் தீண்டாமை கிடையாது

திரு. எம். மாணிக்கராசா பேசும் போது, கிழக்கு மாகாணத்தில் தீண்டாமை இல்லையென்றும், வடக்கு மாகாணத்தில் தீண்டாமையை ஒழிக்க தமிழரசுக் கட்சி பாடுபடுமென்றும் கூறினார்.

திருவாளர்கள் சி எக்ஸ் மார்ட்டின், எஸ். என். செல்லத்துரை, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

---

# யாழ்ப்பாணம்

# ஆயுர்வேத வைத்திய கல்லூரி பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட இலங்கை சுதேச வைத்திய சபையினர், யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் கடந்த மார்ச் மாதம் நடத்திய பரீட்சையின் உத்தியோகபூர்வமான முடிவுகள் வருமாறு:

4-ம் வருடம் 1-ம் பிரிவு எஸ். றெஜி. எம். பகவதிப்பிள்ளை, 2-ம் பிரிவு கே. கந்தசாமி, பி சண்முகரெத்தினம், 3-ம் பிரிவு வி. பாலாக்கிருஷ்ணன், ரி. துரைராஜா, ஆர். முருகவேள் சி. ஜேசுதாசன்.

3-ம் வருடம் 2-ம் பிரிவு ஈ. சந்திரோதயம், வி. குலசேகரம், 3-ம் பிரிவு அ. அல்ரனி, அ. தேவநாயகி எ. அரசக்கோன், பி. பரமலிங்கம்.

2-ம் வருடம் 2-ம் பிரிவு எஸ். பேரம்பலம் 3-ம்பிரிவு கே. வேலும்மயிலும், எஸ் ஸ்ரீ விக்னேஸ்வரன், கே சுப்பிரமணியம், எஸ். பேரின்பம் ரி. தர்மதுரை, என். ஜெயராஜா.

1-ம் வருடம் 1-ம் பிரிவு பி. ரி. ஜோசேப், ஆர் சுசிலா, ரி. கமலாதேவி, 2-ம் பிரிவு கே. பாலசுப்பிரமணியம் எம், நித்தியானந்ததேவி, ஜே. எம். பி. சந்திரோதயம் எஸ். மகேஸ்வரன், ஏ. எம். செபஸ்தியாம்பிள்ளை, எம். எஸ். றசுல்லா, கே. செல்வபாரதி, 3-ம் பிரிவு ரி. நளாயினி, ரி. கதிர்காமநாதன், ஆர். [illegible] றெட்ணம்.

---

# ஜூலை 21-ல் மல்வத்த தேரோ திரும்புவார்

கொழும்பு, திங்கள்

வண. மல்வத்த தேரோ அமுனுகம ராஜகுருஸ்ரீவிபசி மகாநாயக்கா தாய்லாந்திலிருந்து ஜூலை 21-ம் திகதியன்று திரும்பி இலங்கை வந்து சேர்வார். இவர் அண்மையில் கலாசாரத் தூதுக்குழுவொன்றின் தலைவராக தாய்லாந்துக்குச் சென்றிருந்தார்.

இவர் வரும் விமானம் வியாழனன்று காலை 9-30 மணியளவில் கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடையும்.

அவரையும் தூதுக்குழுவையும் விமானநிலையத்தில் வைத்துவரவேற்க கவர்னல் ஜெனரல், பிரதம மந்திரி, மந்திரிகள் மற்றும் முக்கிய அரசாங்க அதிகாரிகள் விமான நிலையத்தில் சமூகமளிப்பர்என எதிர்பார்க்கப்படுகிறது விமானநிலையவரவேற்பின் பின், தூதுக்குழு [illegible]

---

# "உங்களின் தேவைகளை நீங்களே பூர்த்திசெய்யவேண்டும்"

## சிரமதான வைபவத்தில் அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"பொது மக்கள் தங்கள் பிரச்னைகளையும் தேவைகளையும் தாங்களே கூடியளவு தீர்த்துக்கொள்ள முயல வேண்டும். எப்பொழுதும் அரசாங்கத்தை நம்பியிருக்கக்கூடாது. அரசாங்கத்தை எதிர்பார்க்காது உங்கள் தேவைகளை நீங்களே தீர்த்துக்கொள்ள எடுத்துக்கொண்ட இம்முயற்சியைக் கண்டு உண்மையிலேயே நான் பெருமைப்படுகின்றேன்" என்று மக்கள் முன்னேற்ற சங்க சனசமுக நிலையத்தின் ஆதரவில் பாஷையூர் துறைமுகத்தில் வள்ளங்கள் நேரடியாக வருவதற்கான நிலம்தோண்டும் சிரமதானப்பணியை ஆரம்பித்துவைத்து பேசுகையில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா கூறினார்.

பாஷையூர் மக்களினால் அளிக்கப்பட்ட மகஜரை ஏற்றுக் கொண்டு அதற்குப் பதிலளித்தும் பேசிய அரசாங்க அதிபர், அவர்களின் பிரச்னைகளைத் தாம் நன்கு புரிந்திருப்பதாகவும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை தாம் விரைவில் மேற்கொள்வதாகவும் இச் சிரமதானத்துக்குரிய இதர உதவிகளையும் தாம் அரசாங்கத்திடமிருந்து பெற்றுத்தருவதாகவும் கூறினார்.

இவ் வைபவத்தில் யாழ். மாவட்ட காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம், திரு. ஜி. எஸ். அழகையா, திரு கே. பி. சந்தியாப்பிள்ளை, திரு. எஸ். சிவரெத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### சிரமதானம்

இலங்கையிலேயே கடலில் சிரமதான வேலை தொடங்கப்பட்டுள்ளது இதுவே முதல்தடமையாகும். மீன் பிடிக்கும் துறைமுகமும் அதற்குச் செல்லும் வழியும், உஷ்ண காலங்களில் நீர் வற்றிவிடுவதாகவும். கப்பல்களைக் கொண்டுசெலுத்துவது கஷ்டமாக இருப்பதாகத் தெரிகிறது.

பாஷையூர் மக்கள் நலசங்கமும், சனசமூக நிலையமும் அரசாங்க அதிபர், மற்றும் அதிகாரிகளினதும் உதவியுடன் இச்சிரமதான் இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர். சிரமதான வேலைகள் ஒவ்வொரு போயா தினமும், முன்தினமும் நடைபெறும். மாணவர்கள் உட்பட ஏறத்தாழ 150 இளைஞர்கள் அரசாங்கத்தின் அன்பளிப்பான கருவிகளுடன் கடலில் இறங்கினர்,

சனசமூக நிலையத் தலைவர் திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை அரசாங்க அதிபருக்கும் சமுகப்கொடுத்த பிரமுகர்களுக்கும் நன்றி கூறினார்.

---

# உயர்தர கல்வி மசோதா இன்று சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, திங்கள்

அரசாங்கத்தின் உயர்தரக்கல்வி மசோதாவை கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். இரியகொல்லை இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிப்பார்.

சபையின் ஒழுங்குப்புத்தகத்தில் மசோதா "உயர்தரக்கல்வி நிலையங்களை நிறுவுதல், நிர்வகித்தல் மற்றும் அவை சம்பந்தப்பட்ட விஷயங்களையிட்டு உயர்தரக்கல்வித் தேசியக் கவுன்ஸில் ஒன்றினை அமைத்தல்" என விவரிக்கப்பட்டுள்ளது.

மசோதாவின் மீதான விவாதம் இம்மாதம் 25-ம் திகதி ஆரம்பமாகும் விவாதம் நான்கு நாட்களுக்கு நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

தாமதிக்காது

# 'வங்கியின் அறிக்கைகளை தமிழிலும் வெளியிடுக'

## கொழும்பு தமிழ் சங்கம் மகஜர்

கொழும்பு, ஞாயிறு

"சொற்போராட்டங்கள் நடாத்தி கருத்துப் பிரச்னைகளை கிளப்பி தமிழ்பேசும் மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் மனக்கசப்பை வளர்க்கவேண்டாம்" என கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் திரு ச அருளம்பலம் மத்திய வங்கி கவர்னருக்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இலங்கை மத்திய வங்கியின் பெயரை தமிழ் மக்கள் விரும்பாத தமிழ் சொல்லில் உபயோகித்து வந்ததை தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்ச் சங்கங்களும் இடைவிடாது சுட்டிக்காட்டி வற்புறுத்தியதைத்தொடர்ந்து இலங்கை மத்திய வங்கி குறித்த மாற்றத்தை ஏற்றுச்செயல்படத் தொடங்கியுள்ளது. இந்நேரத்தில் இத்தகைய சொற்போராட்ட கருத்துப் பிரச்னைகள் மேலும் மேலும் மத்திய வங்கியில் இருந்து தோன்றக்கூடிய சாத்தியக்கூறுகள் வங்கித்தமிழ்த் தொடர்புகளில்இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

தமிழ்மொழியல்லாத சிங்களச்சொற்களை மத்திய வங்கியின் 'செய்தித்திரட்டு' என்ற சொற்களுக்கு விவரணம் என பாவிக்கப் பட்டுவருவது மெலும்

இப்பிரச்னைகளைக் கிளப்புவதற்கு வழிவகுப்பதுடன் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப்படும் கடிதங்களுக்கு சிங்கள மொழியில் பதில் எழுதப்பட்டுவருகின்றன. தமிழ்மொழி விசேஷ விதிகள் மசோதாவிலும் இராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினால் பாராளுமன்றத்தில் கூறப்பட்ட விளக்கத்திலும் தமிழ்மொழி நிர்வாகம் தெளிவாகக் கூறப்பட்டிருந்தது

---

# அனுதாபக் கூட்டம்

கோண்டாவில், ஞாயிறு

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையத்தில் டாக்டர் கே. சி. சண்முகரத்தினத்தின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்குமுகமாகஓர் அனுதாபக்கூட்டம் நிலையத் தலைவர் திரு. சி க. கனகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அன்னாரின் தன்னலமற்ற சேவைகள் பற்றி திருவாளர்கள் நா. க. கனகலிங்கம், து. இராமச்சந்திரன், ரி. புஷ்பலிங்கம், வாமதேவன் ஆகியோரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் வயல்

தோட்ட இளைஞர்களுக்கு

## சிறு கைத்தொழில்களில் பயிற்சி அளிக்கவேண்டும்

தோட்டப்பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருவதாக இப்போதெல்லாம் பெரிதாகப்பேசப் படுகின்றது.

### இளம் தொழிலாளர்

தோட்டத் தொழிலாளருக்கு வேலைவாய்ப்புகுறைந்தன்னதுடன் புதிய இளம் தொழிலாளர்கள் ஏராளமானோர் வேலை கிடைக்காமல் திண்டாடுகின்றனர். வயது வந்த இளம் தொழிலாளர்களின் பிரச்சினையே இன்று தொழிற்சங்கங்களைப்பெரிய அளவில் கவர்ந்துள்ளன. வாலிபர் சமுதாயத்தைத் தம்வசம் ஈர்த்துக்கொள்ள தொழிற்சங்கங்கள் யாவும் பகீரதப்பிரயத்தனம்செய்து வருகின்றன.

தோட்டங்களில் ஜனப் பெருக்கம் கூடிவரும் அளவுக்கு வேலைவாய்ப்புக்கள் இல்லை. தொழிலாளரின் பிள்ளைகள் தோட்டத் தொழிலைத்தவிர வேறு தொழில்களில் ஈடுபடுவதற்கு வழியில்லை நகரப் பகுதிகளில் ஒரே குடும்பத்தில் உள்ளவர்கள் பல தொழில்களில் ஈடுபட வழியிருக்கிறது. ஆனால் தோட்டங்களில் தோட்டத் தொழிலைத் தவிர வேறு தொழில் இல்லை. வேறு தொழில்களில் ஈடுபடுகிறவர்கள் தோட்டத்தில் தொடர்ந்து வசிக்கவும் இயலுவதில்லை.

### வேறு தொழில்கள்

தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் தோட்டத் தொழிலைமட்டும் நம்பியிராமல் வேறு தொழில்களிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை தொழிலதிபர்கள் செய்வார்களென்று எதிர்பார்க்கவியலாது. தொழிற்சங்கங்களே இதில் முறையாகஏதும் செய்தல்வேண்டும். கைத்தறி நெசவுபோன்ற சிறு கைத்தொழில்களையும் தோட்டப்பகுதிகளில் அறிமுகப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்வது நன்மை பயக்கக்கூடும்.

### சமூக இயக்கங்கள்

கிராமப்பகுதிகளிலும், நகரங்களிலும் சிறுகைத் தொழில்களை இளைஞர்களுக்குப் பயிற்றுவிப்பதற்கு அரசாங்கமும், சமூக இயக்கங்களும் ஈடுபட்டுவருகின்றன. ஆனால் தோட்டங்களில் இப்படியான பணிகளை மேற்கொண்டால் நிச்சயமாகத் தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில்வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவுக்காவது குறைக்கமுடியும்.

### இருவித தடைகள்

நகரப்புறங்களில் இயங்கும் சமூக இயக்கங்களே அன்றி வேறுஸ்தாபனங்கள் தோட்டங்களில்போய் சிரமதானம் அல்லது வேறு பணிகளை மேற்கொள்ள இப்போதெல்லாம் வழியே இல்லை. இதற்குக் காரணம் தோட்டமுதலாளிகள் அப்படியான சமூக இயக்கங்களால் தொழிலாளர் கவரப்படுவதை விரும்புவதில்லை. அத்துடன் தோட்டங்களில் இயங்கும் தொழிற்சங்கங்களும் வேறு இயக்கங்கள் தோட்டங்களில் தலையிடுவதற்கு விட்டுக்கொடுப்பதில்லை. இதன் காரணமாக தோட்டத்தொழிலாளர்கள் உலகமறியாத கிணற்றுத்தவளைகளாய் இருக்க நேர்கின்றது. இந்த நிலைமையை மாற்றி தோட்டத் தொழிலாளர்களையும் இதர சமூகங்களோடு ஒன்றித்துப் பழகவும், மற்றவர்களைப் போல் வேறு தோட்டங்களில் பயிலவும் வழிவகை செய்தல்வேண்டும்.

எல்லாம் அரசாங்கத்தின் அக்கறையில்தான் தங்கியுள்ளது.

## பிசாசின் வாகனமென்று கருதப்பட்ட வெளவால்

வானத்தில் பறக்கும், ஆனால் முட்டையிடும் பறவையல்ல. குட்டி ஈன்று பால் ஊட்டும், ஆனால் பூமியில் நடமாடும் மிருகமல்ல. பிசாசின் வாகனமென்றும் இருளின் அவதாரமென்றும் பிரிட்டனில் பழங்காலத்தில் இந்தப்பிராணியைக் கண்டு மனிதர்கள் பயந்தார்கள்.

வெளவாலின் விசித்திர வாழ்க்கையை விளக்குகிறது இக் கட்டுரை.

வெளவால் உயிர் வாழும் ஜந்துக்களிலேயே மிக விசித்திரமானதொன்றாக விளங்குகின்றது.

பறப்பதினால் பறவையென்றோ, குட்டி ஈனுவதால் மிருகம் என்றோ பிரித்துவிடமுடியாத ஒருவகை ஜந்துவாகத்தோன்றுகின்றது இது.

பரிணாம வளர்ச்சி பற்றி ஆராய்ச்சிபுரியும் நிபுணர்கள் இப் பிராணியின் விசித்திர வாழ்க்கை முறைக்கும் அதன் குணங்களுக்கும் திட்டவட்டமான ஒரு முடிவினை வெளியிட்டிருப்பதாகக் காணோம்! ஆனால், அது பறக்கும் சக்தியைப் பெற்றிருந்தாலும் மிருகங்களுக்குரித்தான உரோமம், பல்லமைப்பு பெற்றிருப்பதாலும், குட்டிகள் ஈன்று பால் ஊட்டுவதாலும் மிருக இனத்துடனேயே வைத்து கணிக்கப்படுகின்றது.

### பிசாசின் உருவம்!

வெளவால் பார்ப்பதற்கு கவர்ச்சியற்ற பிராணி. ஆதிகாலத்தில் பிரிட்டனில் இப் பிராணியைக் கண்டு மனிதர்கள் பயந்தார்கள். பிசாசின் வாகனமென்றும் இருளின் அவதாரமென்றும் அவர்கள் இதை எண்ணினார்கள்.

### பல இனங்கள்

இப் பிராணியில் பல்வேறு ரகங்கள் உண்டு. இலங்கையில் இதுவரை இரண்டுவகையான வெளவால்கள் இருப்பதாகவே கருதப்படுகின்றது. ஒரு இனம் சிறிய உடலையுடைய பழம் தின்னிகள். மற்றவை பெரிய உடலையுடைய பழம் தின்னிகள். சிறியவை பாழடைந்த மண்டபங்களிலும் குகைகளிலும் பகலில் வாசம்செய்கின்றன. பெரியவை விசாலமான மரங்களிலேயே பொதுவாக பகல் வேளைகளைக் கழிக்கின்றன.

பொதுவாக இப் பிராணியால் யாருக்கும் [illegible] இல்லை. பிரிட்டனிலுள்ள ஒருவகை [illegible] பயிர்களை நாசம்செய்யும் வண்டுகளைப் பிடித்துத் தின்பதின் மூலம் மனிதனுக்கு நன்மைபுரிகின்றன.

[illegible]

தோலினால் ஆக்கப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)

குஞ்சிஅப்பு பேசுகிறார்...

## யாரை நம்பிறது.....

இப்ப என்னடா என்றால் வேலியும் எல்லே சேர்ந்து பயிரை மேயுது. என்ன அப்படிப் பார்க்கிறியல்.... என்ட தோட்டத்தில் காய்கறி களவு போனதைப் பற்றிச் சொல்லுறன் என்டே.

அப்படி ஒன்றுமில்லை எங்கட நாட்டிலை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியவர்களே அதை மீறி நடக்கினமாம். பேப்பரில் பார்த்தனான். நாங்கள் அப்ப இந்தக்காலத்திலயாரை நம்பிறது. இது சும்மா கதைக்குச் சொன்னனான். என்றாலும் இப்படிப் படிப்பட்ட விடயங்கள் எல்லாம் நாட்டில் நடக்கிறது உங்களெல்லாருக்கும் தெரியாமலே இருக்கும்.

என்னுமொரு புதினம் தெரியுமோ வாத்திமார் எல்லாம் ஒழுங்கா நடக்க வேண்டும் என்று தலைமைப் பீடம் கேட்டிருக்காம். இதுவும் பேப்பரில்தான் கிடக்கு. இது என்னத்தைக் காட்டுது தெரியுதே....!

இந்தக் காலத்திலை கடமை. பக்தி, விசுவாசம் என்னுறதெல்லாம் ஏட்டுச் சுரக்காய் போல வந்திட்டுது.

''கடவுளே எல்லாருக்கும் நல்ல அறிவைக் கொடுக்க வேண்டும்'' என்று பிரார்த்திக்கிறனான்.

சந்தைக்குப் போறேன் மரக்கறி வாங்க வரட்டும்.

## நான்கு நல்ல வார்த்தைகள்!

### நெருக்கடியான நிலையில்...

○ உணர்ச்சிவசப்பட்டிருக்கும்போதும், நெருக்கடியான நிலையில் தொழில் புரியும்போதும், முக்கியமான தீர்மானங்கள் மேற்கொள்வதைத் தவிர்த்துவிடுங்கள். சற்றுநேரம் சிந்தித்தோமென்றால் நல்ல முடிவுகளை மேற்கொள்ளமுடியும்.

### பயம் எதற்கு?

○ கஷ்டங்கள், துன்பங்கள், வேலைப்பளு, தியாகம் புரியவேண்டிய நிலைமை ஆகியவற்றைக்கண்டு பயப்படாதீர்கள், அவைகளைத் துணிவோடு எதிர்கொள்வதற்கு ஆயத்தமாய் இருப்பவன் வெற்றி வீரனாகிறான்.

### உள்ளம்

○ உங்கள் உள்ளம் எவ்வளவு உயர்வானதாக இருக்கின்றதோ அவ்வளவுக்குதான் உங்கள் வாழ்க்கையும் உயரும். தாழ்ந்த உள்ளம் படைத்தவன் உயர்வான நிலையிலிருந்தாலும் வீழ்ச்சியுறுவது நிச்சயம்.

### பிழை செய்யாதவர்கள்

● பிழை செய்யாதவர்கள் யார்? நிச்சயமாக உயிருடன் இருக்கும் எல்லாமனிதரும் பிழைபுரியக்கூடியவர்களதான். ஆயிரக்கணக்கான வருடங்களாக பிழையேதும் புரியாமல் இருக்கும் மனிதர்கள் எகிப்தில் இருக்கிறார்கள். ஆம். இறந்துபோன பழங்கால மன்னர்களின் சடலங்களைத்தான் குறிப்பிடுகிறேன். அவர்களும் உயிருடனிருக்கும்போது எத்தனை பிழைகளைப் புரிந்தார்களோ?

-பேனா-

அரசாங்கமும் அருந்தமிழும்:

## தமிழ் மக்களின் சரித்திரத்தை எழுதுவதற்கு நிதி உதவி

— திரு. வே. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ். —

(நெறியாளர், தமிழ்வளர்ச்சித்துறை - தமிழ் நாடு)

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஊர்ப் பெயர்கள் உருமாறிக்கிடக்கின்றன. அவை மெல்ல மெல்ல நல்ல வடிவில் அமைந்துவருகின்றன. ஆங்கிலத்தால்சிதை பெற்ற இனிய ஒலிகள் மீண்டும் உயிர்பெற்று எழுந்துள்ளன. ஆயினும் ஆங்கிலத்திலன்றோ அந்தப் பெயர்கள் எல்லாம் முதலில் எழுதப்பெற்றிருக்கின்றன. தமிழ் ஆட்சி மொழியாகிய பின்னர் இந்நிலை நீடிக்கலாமா? எங்கும் தமிழ் முழக்கம் கேட்கின்ற இந்நாளில் தமிழுக்கே முதலிடம் தருதல் வேண்டும். எனவே நம் அரசாங்கம் நெடுஞ்சாலைத் துறையினருக்கு ஆணை ஒன்று அனுப்பியுள்ளது. புதிதாகப் பெயர்ப் பலகைகள் எழுதும் போது நகரப் பெயர்களையும், கிராமப் பெயர்களையும் முதலில் தமிழில் சற்றுப் பெரிய எழுத்துக்களில் எழுதவேண்டும். ஆங்கிலப் பெயர்களை இரண்டாவதாக எழுத வேண்டும். இவையே அரசாங்க ஆணையில் கண்டுள்ள செய்திகள். 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்ற கவியரசர் பாரதியாரின் கனவு நனவாகி வருகிறது.

### நிதி உதவி

அண்மையில் தமிழ்நாட்டு அரசாங்கம்தமிழ் வளர்ச்சிக்காக பாடுபட்டுவரும் அமைப்புகளுக்கு நிதி உதவியளித்துள்ளது. சென்னை நகரில் இயங்கிவரும் தமிழ் வரலாற்றுக் கழகம், கல்வெட்டுகளை ஆராய்ந்து தமிழ் மக்களுடைய சரித்திரத்தை எழுதுவதற்கும், சைவ, வைணவ மதங்களின் சரித்திரத்தை எழுதுவதற்கும் ஒரு திட்டத்தைத் தீட்டியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த முதல் தவணையாக 35,000 ரூபாய்களை அரசாங்கம் அளித்துள்ளது. இத்திட்டப்படி இயற்றப்பட்டுள்ள 'பல்லவர் செப்பேடுகள்' என்ற முதலாவது புத்தகம் இப்பொழுது வெளியிடப்பெற்றுள்ளது. சென்னைமாகாணத் தமிழ்ச் சங்கமும் அண்மையில் அரசாங்கத்தின் உதவியைப் பெற்றது. இச்சங்கத்தின் இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் என்ற வரிசை நூலுக்கு 5,500ரூபாய்வழங்கப்பட்டது- அலகாபாத், தில்லி, கேரளம், ஆக்ரா முதலிய பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்படுத்த தமிழ் நாட்டு அரசாங்கம் இதற்கு முன் நிதி உதவி அளித்துள்ளது. இப்போது கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர ஒருவரை நியமிப்பதற்குத் தமிழ்நாட்டு அரசாங்கம் நிதி உதவி அளிக்க ஆணை வெளியிட்டுள்ளது. இந்த ஆணையின் படி ஒவ்வொரு ஆண்டிற்கும் 10,000 ரூபாயாக ஐந்து ஆண்டுகளுக்கு நிதி உதவி அளிக்கப்படும். தமிழ்க்கலை மன்றம் நடத்திவருகின்ற தமிழ்க்கலை என்ற ஆங்கில வெளியீட்டிற்கும், தென்மொழிகளின்புத்தக டிரஸ்ட்டிற்கும் (Southern Language Book Trust) அரசாங்கம் தேவையான நிதியுதவியை அவ்வப்போது செய்துவருகின்றது. தில்லித் தமிழ்ச் சங்கமும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கமும் தங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி உதவி கோரின. அவர்களுக்கு முறையே ஒரு லட்சம் ரூபாயும் ஐம்பதாயிரம் ரூபாயும் நடப்பு நிதி ஆண்டில் வழங்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

மலேசியாவில் ஏப்ரல்17ந் திகதி முதல் 23-ந் திகதி வரை நடைபெற்ற உலகத் தமிழறிஞர் மகாநாடு பற்றி அனைவரும் அறிந்துள்ளார்கள். இந்நாட்டிலிருந்து 47 தமிழறிஞர்கள் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். இந்த அறிஞர் குழுவிற்குத் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் தலைமை தாங்கிச்சென்றார்கள். தமிழ்நாட்டு பிரதிநிதிகளின் பிரயாணச் செலவின் ஒரு பகுதியைத் தமிழ்நாட்டு அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன்வந்தது.

### வெளியீட்டுக்கழகம்

தமிழ் வெளியீட்டுக்கழகம் இதுவரை 72 நூல்களை வெளியிட்டுள்ளது. இந்த ஆண்டு புதிதாக43 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன இந்நூல்கள் யாவும் நிலைத்த பயனுடையவையாகும். இவை தக்க ஆசிரியர்களைக் கொண்டு எழுதப்பெற்றுச் சீரிய முறையில் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன, இந்நூல் வரிசையில் மொழி பெயர்ப்பு நூல்களும், முதல் நூல்களும் அடங்கியுள்ளன. இந்நூல்களின் அருமை, பெருமைகளை மக்கள் உணரத் தொடங்கிவிட்டனர். இந்நூல்கள் இப்பொழுது கணிசமான அளவில் விற்பனையாகிவருகின்றன.

### ஆட்சிமொழிச்சட்டம்

ஆட்சிமொழிச்சட்டத்தை தக்க முறையில் நிறைவேற்றிவைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன 1963-ல் துறைத் தலைமை அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தின் முதல்நிலை நடைமுறைக்குக்கொண்டு வரப்பட்டது. 1966, மார்ச் மாதம் இவ்வலுவலகங்களில் தமிழ்த்திட்டத்தின் இரண்டாம் நிலை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அரசாங்க செயலகத்திலும் 1-5-66 முதல் தமிழ்த்திட்டத்தின் முதல் நிலையை அமுல்செய்யவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. எல்லா அலுவலகங்களிலும் தமிழில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்குத் தமிழ்ப்பயிற்சி அளிக்கும் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. அரசாங்கச் செயலகத்துப்பணியாளர்களுக்குத் தமிழில் வரைவுகளும், குறிப்புகளும் எழுதப் பயிற்சிதரும் நோக்குடன் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 43 துறைகளுக்குரிய சிறப்புச் சொற்கள் துணை அகராதிகள் இதுவரை அச்சிடப்பெற்று அரசாங்க அலுவலகங்களுக்கு வழங்கப் பெற்றுள்ளன.

### தேமதுரத்தமிழோசை

நமதருமைத் தமிழ்மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது. மிகுந்த வளப்பமுடையது. ''தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்றார் கவியரசர் பாரதியார். ''தமிழுக்கு அமுதென்று பேர்'' என்றார் அவருடைய அன்பர். மல்லிகைப்பூவைப்போல் மணம் வீசுகிறது நம்மொழி. நம்முடையநாட்டில் மட்டுமல்லாமல், இலங்கையிலும் மலேசியாவிலும் நம் அன்னை ஒளி வீசுகிறாள், தமிழ்நாட்டு அரசாங்கம் ஆற்றிவரும் புதிய பணிகளால் தமிழன்னை புதுப்புது அணிகலன்களைப் பெற்று மகிழ்கின்றாள். உங்கள் பங்கினையும் உவந்தளிப்பீர்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆசிரியசங்க வருடாந்த விளையாட்டுப் போட்டிகள்

பருத்தித்துறை, ஞாயிறு
வடமராட்சி ஆசிரியர் சங்க வருடாந்த விளையாட்டுப்போட்டி ஹாட்லிக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் திரு வி இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக தேசிய ஆசிரியர் சங்கத்தலைவர் தி ஏ வைத்திலிங்கம் கலந்துகொண்டார். பின்வருவோர் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

சிரேஷ்ட பிரிவு (ஆண்) கமலேஸ்வரன், ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை. (பெண்) செல்வி பி கௌரி மெதடிஸ் பெண்பாடசாலை, பருத்தித்துறை)

மத்தியபிரிவு (ஆண்) எஸ். சிவனேசசுந்தரம் சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை.

(பெண்) செல்வி எஸ். இராசேஸ்வரி (மெதடிஸ் பெண்பாடசாலை)

கீழ்ப்பிரிவு (ஆண்) கே. தெய்வேந்திரம் (நெல்லியடி மகாவித்தியாலயம்)

(பெண்) எஸ் தயாபதி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

புதிய சாதனையை நிலை நாட்டியவர்கள்:-

மத்தியபிரிவு (பெண்) செல்வி எஸ். இராசேஸ்வரி மெதடிஸ் பெண்பாடசாலை. 150 மீட்டர்- 22 8செக்கன். மத்தியபிரிவு ஆண் கே.குகநேசன் ஹாட்லிக் கல்லூரி ஈட்டி எறிதல் 146 அடி 10 அங்குலம்

எஸ் கமலேஸ்வரன் ஹாட்லிக்கல்லூரி தடியூண்டிப் பாய்தல் 9' 11 3/4'.

அச்சுவேலி

# கிறிஸ்தவ கல்லூரி விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், திங்கள்
மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் இருந்தால் போதாது. தொழிற்கல்வியில் அதிக கவனம் செலுத்தி தாங்களும் முன்னேறி நாட்டையும் முன்னேற்ற வழி செய்ய வேண்டும். கைத்தொழில், கடற்தொழில்களில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முயலுவார்களானால் அவர்களே இந்த நாட்டின் நற்பிரஜையாக முடியும்'' என்று அச்சுவேலி கிறிஸ்தவக்கல்லூரி இல்லங்களுக்கிடையே நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் எம். பி. திரு. எம். கதிரவேற்பிள்ளை தமது உரையில் குறிப்பிட்டார்.

நேற்று நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டிகளில் பிக்னெல் இல்லம் 176 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் சண்டேர்ஸ் இல்லம் 170 புள்ளிகளைப் இடத்தையும், செல் பெற்று இரண்டாம் லையா இல்லம் 156 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பிடித்துக் கொண்டன.

வெற்றிவீரர்கள் விபரம்:

ஆண்கள்: உயர்மேற்பிரிவு வி. பாலசிங்கம், மேற்பிரிவு எஸ். செல்வநாதன், மத்தியபிரிவு ரி. இராசசிங்கம். கீழ்ப்பிரிவு- எஸ. தங்கமயில், பாலர் பிரிவு- எஸ். தற்பரநாதன்.

பெண்கள்: மேற்பிரிவு: எம். கமலாதேவி, மத்திய பிரிவு- கே. சாந்தினிமலர், கீழ்ப்பிரிவு- கே. வசந்தலாராணி, பாலர்பிரிவு- பி. சரோஜினிதேவி, எம். இராசகுலம்.

வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி கதிரவேற்பிள்ளை பரிசுகள் வழங்கினர்

மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

# யங்லயன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறு வரும் மென் பந்துச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டி யொன்றில், யங்லயன்ஸ்விளையாட்டுக் கழகம் அரியாலை விளையாட்டுக் கழகத்தை 9 விக்கட்டுகளால் தோல்வியடையச் செய்தது.

'ஏ' பிரிவு, 'பி' பிரிவு, 'சி' பிரிவு என்ற மூன்று பிரிவுகளில் ''சி'' பிரிவில் அரியாலை விளையாட்டுக்கழகமும் 'பி' பிரிவில் யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகமும் சாம்பியனாக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பந்தெறிவதில் இரு கோஷ்டி வீரர்களும் சிறந்து விளங்கியதாய் தடுப்பெடுத்தாடுவதில் எக்கோஷ்டியும் சோபிக்கவில்லை. முதல் இனிங்சில் அரியாலைக் கோஷ்டி சகல விக்கட்டுக்களையும் இழந்து மொத்தம் 31 ஓட்டங்களைப் பெற்றது.

இச்சந்தர்ப்பத்தில் யங்லயன்ஸ் பந்தெறி வீரர்களான இம்மனுவல் 17 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 4 விக்கட்டுகளையும், பெனடிற் 8 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்கள்.

யங்லயன்ஸ்கோஷ்டியினர் 1-வது இனிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் புரட்சிதாசன் 14 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றார். இச் சந்தர்ப்பத்தில் அரியாலைக்கோஷ்டியின் பந்தெறி வீரர்களான எஸ். கே. மகாலிங்கம் 21 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 7 விக்கட்டுகளை வீழ்த்தினர். 2-வது இனிங்சில் அரியாலைக் கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 20 ஓட்டங்களை பெற்றது. இச் சந்தர்ப்பத்தில் யங்லயன்ஸ் பந்தெறி வீரர்களான பெனடிற்றும், இம்மனுவலும் மொத்தம் 9 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கட்டுகளை வீழ்த்தினர் 2-வதுஇனிங்சில் யங்லயன்ஸ் கோஷ்டி துடுப்பெடுத்தாடி ஒரு விக்கட்டை இழந்து 8 ஓட்டங்களைப் பெற்றது. இப்போட்டி யாழ். முற்றவெளி மைதானத்தில் நடை பெற்றது.

## அப்பர் இல்லம் வெற்றியீட்டியது

கோண்டாவில், ஞாயிறு
கோண்டாவில் சைவத் தமிழ்கலவன் சாதனா பாடசாலையின் இல்லங்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டி வடபகுதி உடற்பயிற்சி வித்தியாதரிசி திரு. ஆர். எஸ். சிவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. அப்பர் இல்லம் 174 புள்ளிகளைப் பெற்று டாக்டர் வி. பரராசசிங்கம் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது. சுந்தரர் இல்லம் 169 புள்ளிகளையும், சம்பந்தர் இல்லம் 159 புள்ளிகளையும் பெற்றன. போட்டியில் வெற்றி பெற்றோருக்கு திருமதி பி ஜே. சிவரத்தினம் பரிசில்களை வழங்கினர்.

## சப்பந்தர்இல்லம் வெற்றி

கோண்டாவில், ஞாயிறு
கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ணவித்தியாலய இல்லங்களுக்கிடையில்நடைபெற்ற வருடாந்தவிளையாட்டுப்போட்டி கல்லூரி அதிபர் திரு. இராமசுவாமி தலைமையில் நடைபெற்றது சம்பந்தர் இல்லம் 103 புள்ளிகளைப்பெற்று இவ்வருட சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. சுந்தரர் இல்லம் 88 புள்ளிகளையும் அப்பர் இல்லம் 49 புள்ளிகளையும் பெற்றன.

## பாரதி இல்லம் வெற்றி

கோண்டாவில், ஞாயிறு
கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் பாடசாலை மைதானத்தில் தலைமையாசிரியர் திரு. க. சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. திரு. எஸ். விசுவலிங்கம் வித்தியாதரிசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்,

போட்டியில் பங்குபற்றிய மூன்று இல்லங்களில் பாரதி இல்லம் 184 புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தையும், நாவலர் இல்லம் 133 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும் விபுலானந்தர் இல்லம் 130 புள்ளிகள்பெற்று மூன்றும் இடத்யும் பெற்றன.

## பட்டதாரி மாணவர் விளையாட்டு போட்டி

சுழிபுரம், ஞாயிறு
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர்கள் விளையாட்டுப் போட்டி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. மஞ்சள் இல்லம் 121 புள்ளிகளைப் பெற்று முதலாது இடத்தையும் கிறிம்ஷன் இல்லம் 105 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும் பெற்றன.

## சாம்பியன் போட்டி

யாழ்ப்பாணம், திங்.
எதிர்வரும் போயாதினமன்று யாழ். மாவட்ட மென்பந்து விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவிலான மென்பந்துச்சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி, 'பி' பிரிவுச்சாம்பியன் கோஷ்டியான கெனடி ஞாபகார்த்தக் கோஷ்டிக்கும் 'சி' பிரிவின் சாம்பியனான அரியாலைக் கோஷ்டிக்கும் இடையில் யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெறும்.

கல்வி இலாகாநடத்தும்

# வடமாகாண பாடசாலைகள் வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம், திங்கள்
கல்வி இலாகாவினால் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்படும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை - செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற இருக்கின்றது. இந்தத்தடவை மேற்பிரிவில் எட்டுக் கல்லூரிகளும், மத்திய பிரிவில் எட்டுக கல்லூரிகளுமாக 16 கல்லூரிகள் கலந்துகொள்ளும்.

சுற்றுப்போட்டியில் பங்கு பற்றும் பாடசாலைகளின்விபரம் வருமாறு: மேற்பிரிவு— பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, சாவகச்சேரி றிபேக், அச்சுவேலி சென் கிறேஸ், யாழ். திருக்குடும்பக் கன்னியாஸ்திரி, உடுவில் மகளிர் கல்லூரி, இளவாலை மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் பாடசாலை, உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை.

மத்தியபிரிவு — திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம், உடுவில் மகளிர், பண்டத்தரிப்பு மகளிர், அச்சுவேலி சென்திறேஸ், இளவாலை மகளிர், யாழ். திருக்குடும்பக் கன்னியாஸ்திரி, உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை, சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம்.

## பிசாசின் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் கைபோன்ற பாகத்தின் நுனியில் நீண்ட ஐந்து விரல்கள் இருக்கின்றன. இந்த விரல்கள் குடைக்கம்பியைப் போல விரிந்து வெளவாலின் சிறகு விரிவதற்கு உதவுகின்றன. பகலில் உறங்கும்போதும், ஓய்வுகொள்ளும்போதும் இம் மிருகம் தன் கால்களினால் மரக் கொப்பையோ அல்லதுவேறு பொருளையோ பிடித்துக்கொண்டு தலைகீழாகத்தொங்குகின்றது. இப்படி உறங்கும்போது நழுவி விழுந்துவிடாதபடி அதன் கால்விரல்கள் அமைந்துள்ளன

### மனிதருக்கு போல்

இது குட்டி ஈன்றதும் அதை பாலூட்டி வளர்க்கின்றது. குட்டி சிறிது பருமனாகும் வரை தன்னுடனேயே கொண்டுசெல்கின்கின்றது. சிறிது பருத்தவுடன் இரை தேடும் பொழுது உறைவிடத்தில் விட்டுச்செல்கின்றது. தாய் வெளவால் மரத்தில் தொங்கும்போது அதன் குட்டி தாயின் மார்பகத்துக்குச் சென்று பால் அருந்துகின்றது. இகர மிருகங்களுக்குப் போலல்லாமல் இதன் பால் மடிகள் மனிதருக்குப்போல் மார்பிலேயே இரண்டுபுறமும் அமைந்துள்ளன. வெளவால் ஒரு தடவையில் ஒரு குட்டிக்குமேல் பொதுவாக ஈனுவதில்லை. சில சமயங்களில் இரட்டைக் குட்டிகள் போடுவதுண்டு. ஒரு வெளவால் இரண்டாண்டுகள்வரை குட்டியாகவே இருக்கும். இவை அனேகமாக பத்துவருடம் அல்லது அதற்கு மேலும் உயிர்வாழ்கின்றன.

மேல்நாடுகளில் காணப்படும் வெளவால்களில் பிரசித்தமான ஐந்து இனங்கள் பின்வருமாறு:

1 பறக்கும்நரி: இது பெரிய வகை வெளவால். இதன் சிறகு 4 அடி வரை நீண்டதாக இருக்கும். இதன் முகமும் காதுகளும் நரியினுடையது போல் தோன்றும்.

2. பெரிய குதிரைலாடம்: இதன் மூக்கில் குதிரைலாடம் போல் ஒரு சதைப் பிண்டம் வளர்ந்திருக்கும். இதன் முகம் பார்ப்பதற்கு மிக அருவருப்பாக இருக்கும்.

3. நீள்செவி வெளவால்: இது ஒரு சின்ன பிராணி. ஆனால் அதன் காதுகள் நீண்டு பெரிதாகத் தோன்றும். காதுகளின் நீட்பம் அதன் உடம்பின் அளவுக்கு இருக்கும்,

4சப்பைமூஞ்சிநாய்: இதன் முகம் சப்பையானமுகத்தை யுடைய நாயினுடையது போல் இருக்கும்.

5. இரத்தம் உறிஞ்சி: இது மிருகங்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதின் மூலம் உயிர்வாழ்கின்றது.

''பேனு''

## மாணவர்களின் சுற்றுப்பிரயாணம்

கோண்டாவில், ஞாயிறு
கோண்டாவில் சைவத் தமிழ்க் கலவன் சாதனா பாடசாலை வருடாந்த இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில்முதல் இடத்தைப் பெற்ற அப்பர் இல்ல மாணவமாணவிகளும் ஆசிரியர்களும் இல்லத்தலைவர் திரு செ நடேசு தலைமையில் தீவுப்பகுதியிலுள்ள சரித்திர சம்பந்தமான புனித இடங்களைச் சுற்றிப்பார்த்தனர்.

## இலங்கை இந்தியர் நலவுரிமைச் சங்கம்

மன்னார், ஞாயிறு
மன்னார் மாவட்டத்தில் வாழும் இந்திய பரம்பரையினரின் கஷ்டங்களை நீக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்வதற்காக இலங்கை இந்தியர் நலவுரிமைச் சங்கம் என்றபெயரில் மன்னார் மாவட்டத்தில் சங்கம் ஒன்றை உருவாக்க இங்கு உள்ள பிரமுகர்கள் சிலர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கோவில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய
விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான
அபிஷேக சந்தனம்
கோவில் அபிஷேக திரவியங்கள்,
வாசனை மிக்க பன்னீர்,
பரிமளம் நிறைந்த சந்தனவில்லைகள்
விளவு நூடம்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
( மருந்துச்சரக்கு வியாபாரம் )
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி

# மயிலியதனைக் கருகில் நீர் வற்ருக் கிணறு

## உணவு உற்பத்திக்குப் பயன்படுத்த நடவடிக்கை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

உடுப்பிட்டிக்கு அண்மையிலுள்ள மயிலிபதனை வெங்காயச்சங்கத்திற்கு அருகாமையில் பல வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, இக்கிணற்று நீரை வற்றச் செய்வதில் நான்கு தண்ணீரிறைக்கும் இயந்திரங்கள் வேலை செய்தும் நீர் வற்ருத காரணத்தால், அவ்வூர்மக்கள் வடமராட்சி உணவு உற்பத்தி மேற்பார்வையாளருக்கு இதுபற்றி அறிவித்தனர்.

இதனைத்தொடர்ந்துபருத்தித்துறை காரியாதிகாரி திரு. ஏ. ஜீ. விசுவநாதன் தலைமையில் சென்ற குழுவொன்று அதனைப் பார்வையிட்டது. அக்குழுவினரின் ஆராய்ச்சிப்படி இக்கிணற்றில் 200 கலன் நீர் இருப்பதாகவும் இதன்மூலம் 50 ஏக்கருக்கு நீர்ப்பாய்ச்சி உணவு உற்பத்தியைப் பெருக்கமுடியும் எனவும் தெரியவந்துள்ளது. இவ்விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து இக்கிணற்று நீர்பற்றி ஆராய்ச்சி செய்வதுகுறித்து காணி அபிவிருத்தி இலாகாவுக்கு அறிவிப்பதென்றும் அக்குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

# ஜெனீவா ஒப்பந்த 12-வது ஆண்டு தினம்

## படைதிரட்டல் உத்தரவை தொடர்ந்து வியட்காங் ஆலோசனை

ஹானோய், ஜூலை 17

இன்று இந்தோசீனு சம்பந்தமான ஜெனிவா ஒப்பந்தம் கைச்சாத்தான 12-வது ஆண்டு தினமாகும்.

டாக்டர் ஹோசி-மின்னின் படைதிரட்டல்உத்தரவைத் தொடர்ந்து வியட்காங்கியர் இன்று கூடி எதிர்காலத்திட்டம் பற்றி ஆலோசனை நடத்தினர்கள்.

தென்வியட்னுமில் போராடும் வியட்காங்கியருக்கு சகல உதவிகளும் அளிக்க, வடவியட்னும் அதிபர் டாக்டர் ஹோசிமின் உறுதியளித்திருக்கிருர்

கடந்த ஒரு ஆண்டில் 1200 அமெரிக்க விமானங்களை வடவியட்னும் சுட்டு வீழ்த்தியிருப்பதாக ஹோ இன்று கூறினர்.

இதற்கிடையில் பீகிங்கில் கடந்த 2 தினங்களாகப் பேச்சு நடத்திய வடவியட்னும்தூதுகோஷ்டி ஹானோய்க்குத் திரும்பியிருக்கிறது.

## பொதுமக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சீர்திருத்தத்தை வரவேற்கின்றது ஆனல் பெற்றோர்கள் இஷ்டமானுல் தமிழ் அல்லது சிங்கள மொழியை போதனு மொழியாக தெரிந்து கொள்ளலாம் என்ற பகுதி பிள்ளைகளின் நலனிற்காக அமையாதென நாம் கருதுகின்ருேம்.

தோட்டப் பகுதிகளில் போதிய அளவு பாடசாலைகளை உண்டாக்கவும் இரு பாஷைகளை போதனு மொழியாகவும் வேண்டி நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமெனவும் இச்சங்கம் தீர்மானிக்கிறது.

மாணவர்களை தொழிற்கல்விக்கு 8-ம் தரத்தில் வைத்து தரம்பிரிப்பது உகந்ததல்ல என்பதாலும் செயல்முறை சாத்தியமற்றதென்பதாலும் மாணவர்களை 8-ந் தரத்துக்கு மேல் வைத்து அவரவர் தகுதிக்கேற்ப வெவ்வேறு வகுப்புகளில் தரம்பிரிக்க வேண்டும்.

## பாணில் வண்டு!

சங்கானை, ஞாயிறு

சங்கானைப் பகுதியில் விற்பனையாகும் பாண் மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் இருக்கிறது இங்குள்ள சகல பாண் நிலையங்களில் இருந்தும் விற்பனைக்கு வரும் பாணில் வண்டுகள். புழுக்கள் முதலிய அசுத்தப் பொருட்கள் இருக்கின்றன. இதன் காரணமாக பாணை உணவுப்பொருளாக பாவிக்கமுடியாத அளவுக்கு பொதுமக்கள் பெரும் அதிருப்தியடைந்துள்ளனர். இதுகுறித்து இப்பகுதி சுகாதார அதிகாரியிடமும் முறையிடப்பட்டுள்ளது.

## இலங்கை வானெலியில் பேர்னட்ஷா

### தமிழ நிகழ்ச்சியில் எம் பி கலந்து கொள்வார்

குரும்பசிட்டி, ஞாயுறு.

இலங்கை வானெலி தேசிய ஒலிபரப்பின் தமிழ்ப் பகுதியினர் அறிஞர் பேர்னட் ஷாவின் 110 வது ஆண்டு நிறைவையொட்டி நடத்தவிருக்கும் சிறப்பு நிகழ்ச்சியொன்றில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கமும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தவிருக்கிருர்' இவருடைய சொற்பொழிவு இம்மாதம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 9-15மணிமுதல் 9-30 மணிவரைஒலிபரப்பப்படும்.

# தீப்புண், காயங்களுடன் 8 வயதுச் சிறுமி

## பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதி

கொழும்பு, ஞாயிறு

அடிகாயங்களுடனும், தீப்புண்களுடனும் எட்டு வயது வேலைக்காரச்சிறுமி ஒருத்தி இரத்தினபுரி ஆஸ்பத்திரியிலிருந்து பதுளை ஆஸ்பத்திரிக்குக்கொண்டுவந்து அனுமதிக்கப்பட்டிருக்கிருர்.

இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் தாதி ஒருவரின் வீட்டில் பணிப்பெண்ணுகக் கடமையாற்றியதாகக் கூறப்படும் இச்சிறுமி, தனது எஜமானியினுல் கொடூரமாகத் தாக்கப்பட்டு காயமடைந்ததாகவும் எஜமானியையும் பணிப்பெண்ணையும் காணவில்லையென்று அயலார் பொலிசாருக்குப் புகார் செய்ததாகவும் அதைத்தொடர்ந்து காயத்துடன் அச்சிறுமியைப்பொலிசார் கண்டுபிடித்து இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்து பின்னர் பதுளை ஆஸ்பத்திரிக்குக்கொண்டு சென்றதாகவும் அறியப்படுகிறது இது சம்பந்தமாகப் பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## சுந்தரர் குருபூசை

காலி, ஞாயிறு

',காலி ஸ்ரீமீனுட்சி சுந்தரேஸ்வரராலயத்தில் இம்மாதம்25ம்திகதிதிங்கட்கிழமை மாலை 7 மணியிலிருந்து சுந்தரர் குருபூசை விழாவை சிறப்பாக அவ் ஆலய பரிபாலன சபையினர் கொண்டாட ஏற்பாடுசெய்துள்ளனர்,இவ் விழா விற்கு 'ஈழநாடு' பத்திரிகாசிரியர் திரு. கே.பி.ஹரன் தலைமை தாங்குவார்.

கொழும்பு இந்து மகளிர் சங்கக்காரியதரிசி, செல்வி சற்சொருபதிநாதன் திருமதிவசந்தா வைத்தியநாதன் உட்பட அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## கத்திகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கும் அறிவித்திருந்தனர்.

நேற்று முன்தினம் இக்கார் குச்சிவெலி பகுதியினூடாக சென்றபோது பொலிஸார் சந்தேகத்தின் பேரில் அதன் பின்னுல் ஜீப்பில் துரத்திச் சென்றனர், தண்ணீர்க் கடவையொன்றின் அருகில் சென்றதும் கார் திடீரென நின்றது. அதில் இருந்தவர்கள் பொலிசாருடன் உக்கிரமாக எதிர்த்துப் போரிட்டனர். ஆனல் பொலிசார் அவர்களை அடக்கி கைது செய்து கொழும்பு முனிசிபில் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு தனவந்தரின் வீட்டில் நகைகளும் பணமும் கொள்ளையடிப்பதற்கான ஒரு திட்டமும் இந்தக் காரினுள் இருந்ததாக அறியப்படுகிறது.

## 3 லட்சம் பௌத்தர்கள்

லண்டன், ஜூலை17

பிரிட்டனில் இப்பொழுது சுமார் 3 லட்சம் பௌத்தர்கள் வசிக்கிருர்களென்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இரண்டு பௌத்த ஆலயங்கள் லண்டனில் இருக்கின்றன.

## புதிய ஜவுளிக்கூப்பன்

கொழும்பு, சனி

உங்களது பங்கீட்டரிசிப் புத்தகங்களை கவனமாக வைத்திருக்குமாறு வர்த்தக அமைச்சு கேட்டுள்ளது.

புதிய ஜவுளிக்கூப்பன் அடுத்த மாதம் முதல் திகதியிலிருந்து வழங்கப்படுமென்றும் தற்போது அமுலிலிருக்கும் 97-வது ஜவுளிக்கூப்பன் [illegible] செல்லுபடியாகுமென்றும் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

## "பொருளாதாரத்தை உயர்த்தவே காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன"

— வவனியா எம பி.

வவனியா, ஞாயிறு

'நாட்டின் பொருளாதாரத்தைஉயர்த்தி உற்பத்திப் பொருட்களை கூட்டாக ஓர் இயக்கமாக உதவி செய்யச் சகல குடியேற்றத்திட்டவாதிகளும் முன்வரவேண்டும். இப்படி முன்வரும் நோக்கத்துக்குத்தான் இக்காணிகள் பகிர்ந்துகொடுபடுகின்றன'

ஒட்டுசுட்டானில் நடைபெற்ற காணிக்கச்சேரியின் போது வவனியா எம், பி. திரு. தி. சிவசிதம்பரம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது.

நெற்செய்கையில் அதிக விளைச்சலைப்பெற இரசாயனப் பசளை பாவித்தலும், களை அகற்றலும் பூச்சி, புழு நாசினி அடித்தலும் கைக்கொண்டால் 90 புசல் தொடக்கம் 120புசல் வீதம் நெல் விளைவைப்பெருக்கலாம்.

பம்பாய் வெங்காயம் இதுவரைக்கும் எவ்வாறு உற்பத்திசெய்வது என்பது கூடத் தெரியாதிருந்தோம். ஆனல் அண்மையில் வவனியாவில் விவசாயப் பகுதியினரால் வவனியா மாவட்டத்தில் பம்பாய் வெங்காயம் செய்யலாமென்பதை நிரூபித்துவிட்டனர். அவர்கள் முதற்தடவையே எதிர்பார்த்த விளைச்சலை விடக் கூடுதலான விளைச்சலை விவசாயிகளுக்குக்காட்டி ஊக்கத்தையும்கொடுத்துள்ளனர்.

# 'நாட்டின் பிரச்னையை தீர்ப்பதில் மாதர்கள் முன்வரவேண்டும்'

## மாதர் மகாநாட்டில் அழைப்பு

வவனியா, ஞாயிறு

''மாதர்கள், தங்களின் எதிர்கால வாழ்க்கையை உணர்ந்து, வீட்டில் வேலையின்றி இருக்காமல் தங்கள் வீட்டுப்பணிகளைச் செய்வதுடன் நாட்டின் பிரச்னைகளைத்தீர்க்கமுன்வர வேண்டும் இப்பொழுது இலங்கையில் வளர்ந்து வரும் வேலையில்லாப் பிரச்னைக்கு மாதர்கள்' ஆண்களுடன் சரிநிகர் நின்று நாட்டின் பிரச்னைகளை அணுகவேண்டும் வீட்டிலுள்ள நிலங்களில் வீட்டுத் தோட்டம், கோழி வளர்ப்பு ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும். நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்வதில் பெண்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நேற்றுமாலை முள்ளியவளை மாதர்முன்னேற்றசங்க மண்டபத்தில்நடைபெற்றமாதர் மகாநாட்டில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் திருமதி ரி. சிவசிதம்பரம் கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: மேடையில் பேசிவிட்டு வீட்டில் வேலையின்றி இருப்பதென்ருல் எமது மாதர் சமூகத்துக்கே பெரும் இழுக்காக முடியும். தமிழ் நாட்டு பெண்களின் சரித்திரத்தை புரட்டிப் பார்த்தால் பண்டைக்காலத்தில் ஆண்களோடு பெண்கள் எவ்விதமாக சரிநிகராக நின்று போராடினுர்கள் என்பது புலனுகும் போர்க்களத்தில் கூட பெண்கள் தங்கள் வீரம்காட்டி வெற்றியும் ஈட்டினுர்கள் இன்று உள்ள சில மங்கையர் தங்களுக்கு அரசாங்க உத்தியோகம் வேண்டுமென்று விரும்புகின்றனர் இதனை நீக்கி நம் மாதர் விவசாயிகளை திருமணம் செய்ய வேண்டும். வயலில் இறங்கி வேலை செய்யவேண்டும் இதன் மூலமே எமது நாட்டு மங்கையர் மங்காத மாணிக்கங்கள் ஆவர்கள்.

## மாஸ்கோவுக்கு பிரிட்டிஷ் பஸ்கள்

மாஸ்கோ, ஜூலை 17

மாஸ்கோ நகர வீதிகளில் பிரிட்டிஷ் பஸ்களை உபயோகிக்க, அந்நகர மேயர் அனுமதி கோரியிருக்கிருர்.

## போட்டிகள் ஆரம்பம்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்க சமாஜத்தினர் கூட்டுறவு தினவிழாவை கொண்டாடுமுகமாக பல போட்டிகளை நடாத்தஏற்பாடுகள் செய்துள்ளனர். நேற்றுத்தொடக்கம்போட்டிகள் நடைபெற்றுவருகின்றன'

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர தேவஸ்தானத்தில்தேவ மகோற்சவம் இன்று மாலை 6மணிமுதல் 7-30மணிவரை திரு. ஆறுமுகம்ஆசிரியர் திருவிளையாடல் கதாப்பிரசங்கத்தொடரில் ''வேதத்துக்குப் பொருள் அருளியது'' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

## சுகாதார அதிகாரி நடவடிக்கை

சங்கானை, ஞாயிறு.

மானிப்பாய் வைத்திய சுகாதார அதிகாரி டாக்டர் எஸ் சின்னத்தம்பி சங்கானை பட்டின சபையில் சுகாதார விஷயங்களைப்பற்றி பட்டின சபைத்தலைவருடன் ஆலோசனை நடாத்தினர். அப்பொழுது பட்டினத்தை எவ்வாறு சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்று விரிவான ஆலோசனை கூறினுரெனவும் தெரியவருகிறது.

அச்சமயம் பட்டின சபையின் சுகாதாரப்பரிசோதகர் திரு. கே. அருளம்பலம் பிரசன்னமாய் இருந்தார்.

இதுபோன்றசுகாதாரவிடயங்களைப்பற்றி சுகாதார அதிபர் டாக்டர் எஸ். சின்னத்தம்பி மானிப்பாய்பிரிவிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் எல்லாவற்றிற்கும் மாதம் தோறும் ஆலோசனை கூறுவார் எனவும் தெரிய வருகிறது.

## பஸ் சேவை பற்றி புகார்

சங்கானை, ஞாயிறு.

நேற்று முற்பகல் சுமார் 10மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரை வலிகாமம் மேற்கில் சேவை செய்யும் கீரிமலை, காரைநகர் பஸ்வண்டிகள் நேரஅட்டவணைப்படி சேவையில் ஈடுபடவில்லை என புகார்செய்யப்பட்டுள்ளது.

இதனுல் பொதுமக்கள் கஸ்டத்துக் குள்ளானுர்கள். இதையிட்டு பஸ்பிரயாணிகள்சிலர் இ. போ. ச. கந்தோரில் முறையிட்டுள்ளார்களெனவும் தெரிய வருகிறது.

கோலாலம்பூர் ஜூலை 17

இந்தோனேஷியாவும், மலேஷியாவும் யுத்தக்கைதிகளை பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளவிருக்கின்றன.

1000க்கு மேலான இந்தோனேஷியக் கைதிகள் மலேஷியாவில் இருக்கின்றனர்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 55 இலத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org